உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 24] விசுவாவசு - வைகாசி - 10—6—65 [இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினேப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

சாத்திர தோத்திரம்

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி எம் மாணுகிய சிவபெருமானே முதல்வனுகக்கொண்டு, சிவமே பெறும் திருவை எய்துவிப்பதாகிய சிவநெறிக்கு - சைவ சமயத்திற்கு இருகண்களாய்த் திகழ்வன தோத்திரங்களும் சாத்திரங்களும். 'தோத்திரங்கள்' எனப்படுவன, தேவாரம், திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகள். சாத்திரங்கள் எனப்படுவன திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த நூல்கள் பதினன்கும். தோத்திரங்கள் சிவபெருமானிடத்தில்

பக்தியைப் பெருக்குவன; சாத்திரங்கள், பக்திக்கு முதலாய் உள்ள தத்துவக் கருத்தை விளக்குவன.

யாதொரு பொருளையும் அதன் தன்மையை உள்ளவாறு உணர்ந்து அதன்பின்னர் அதனைக் கொள்ளுதலோ, தள்ளுதலோ செய்தல்வேண்டும். அவ்வாறே ஒழுக்க நெறியினையும் நன்குணர்ந்து கடைப்பிடித்தல் வேண்டும். அவ்வகையில் பக்தியையும், அதனது சிறப்பு, பயன் முதலியவற்றையும் உணர்ந்து மேற்கொள்ளுதல் நலம். இல்லையேல் அது நிலைபெற்றுப் பயன் தருதல் அரிது. ஆதலின், கடவுள் நெறியின் உண்மைகளை ஆராய்ச்சி முறையில் நன்கு எடுத்து விளக்குவன, சாத்திரங்கள். ஆகவே, தோத்திரங்கள் இலக்கியமும், சாத்திரங்கள் இலக்கணமும் என்று கூறலாம். இலக்கணம் இல்லாதபொழுது இலக்கியத்தின் உண்மையை முற்றிலும் உணர்தல் இயலாததுபோல சாத்திரம் இல்லாதபொழுது தோத்திரங்களின் உண்மைப் பொருள்களை நன்கு உணர்தல் இயலாது. இன்னும், உண்மையான பத்தியுங்கூட, சாத்திர ஞானத்தின் பயனாகவே விளைவதாகும். கண்ணப்ப நாயனார் போன்றவர்களுக்குச் சாத்திரஞானம் இல்லாமலே பக்தி உண்டாயினது போலத் தோன்றினாலும், உண்மையில் அவர்களெல்லாம் முன்பிறப்பிலே அந்த சாத்திர ஞானத்தைப் பெற்றவர்கள் என்பதே உயர்ந்தோர்களது துணிபு. அதனை,

> " முன்புசெய் தவத்தின் ஈட்டம்
> முடிவிலா இன்ப மான
> அன்பினை எடுத்துக் காட்ட "

என்று, கண்ணப்ப நாயனார் புராணத்தில் வருகின்ற பகுதியை நோக்கினால் தெளிவாகும்.

இவ்வகையில் தோத்திரமும், சாத்திரமும் மலரும் மணமும் போல்வனவாயினும், அவ்வாறு ஒன்றுபட்டு நில்லாது, இலக்கிய நூலும், இலக்கண நூலும்போல வேறு

வேருய்க் காணப்படுகின்றன. ஆயினும், அவை மலரும் மணமும்போல ஒன்றுபட்டுக் காணப்படுவதோரு நூல் உண்டு. அஃது எது? அண்மைக் காலத்தே அருள் வாழ்க்கை வாழ்ந்து அருள்சேர் முத்தியை அடைந்த தாயுமான அடிகளது பாடல் தொகுதியாம். அது, தோத்திர நூல்தான்; ஆயினும், அந்நூல் முழுவதும் நிரம்பிக்கிடப்பது, சாத்திரமே. ஆகையால், அதனை, '**சாத்திர தோத்திரம்**' என்று கூறலாம்.

திருமுறைகளுள் திருமந்திரம், திருத்தொண்டர்புராணம் தவிர, ஏனைய எல்லாம், பத்தியை வளர்க்க அமைந்த புராணவரலாறு முதலியவைகளை மிகுதியாக எடுத்தோதி, இறைவனது பொருள்சேர் புகழை விரிக்கும் தோத்திரங் களாய் உள்ளன. அவைகளில் சாத்திரக் கருத்துக்கள் ஓரோர் இடத்தில் அருமையாய் ஆங்காங்கு இலைமறை காய் போல் காணப்படும். திருமந்திரம் சாத்திரமே திருத் தொண்டர் புராணம், வரலாற்று நூல். திருமுறைகளுக்குப் பின்னர், சித்தாந்த சாத்திரங்கள் தோன்ற, அவற்றிற்குப் பின்னர் எழுந்த தோத்திர நூல்களில் இச்சாத்திரக் கருத்துக் கள் கலந்து காணப்படலாயின. ஆனாலும், முழுவதும் சாத்திரமே பொங்கித்ததும்பும் தோத்திரம், தாயுமான அடி களது பாடலேயாகும்.

தாயுமான அடிகள், இறைவனைத் தத்துவ நெறியில் நின்று துதிக்கின்றார்; தாம் வேண்டுவனவற்றையும், தத்துவ முறையிலே வேண்டுகின்றார். இதனால் அவரைச் சிலர், யாதொரு சமயத்தையும் சாராதவர் என நினைத்து விடுகி ன்றார்கள். இன்னும் சிலர் அவரை அத்வைத மதத்தவர் என்று கருதிவிடுகின்றார்கள். (அவர்கள் அத்வைதம் என்பது ஏகான்ம வாதத்தையே). அடிகளது பாடலை முற்றும் ஓதி உணர்வார்க்கு இவ் ஐயங்கள் தோன்றமாட்டா.

" சைவ சமய மேசமயம் ;
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டும் ; இந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந் துழலும் சமயநெறி
புகுத வேண்டா "

" விண்ணவர். இந்திரன் முதலோர் நாரதாதி
.........எல்லாம் இச்சமயத் தன்றோ.
செப்பரிய சித்திமுத்தி சேர்ந்தார் ? "

" ....இரா சாங்கத்தில்
அமர்ந்தது வைதிகசைவம் ; அழகிதந்தோ ! "

என்பனபோன்ற பகுதிகள், அடிகளுக்குச் சைவ சமயத்தின் மீதுள்ள அளவுகடந்த பற்றினை நன்கு விளக்குகின்றன அன்றோ !

தத்துவ நெறியிலே இறைவனைப் போற்றுகின்ற அடிகள், எந்த ஒரு தத்துவ நெறியில் போற்றுகின்றார் ? சைவ சித்தாந்தத் தத்துவ நெறியிலேதான் போற்றுகின்றார் என்று சொல்லவும் வேண்டுமோ !

'சின்மயானந்த குரு' என்ற ஒரு தலைப்பில் உள்ள பாடல்களில், " காரிட்ட ஆணவக் கருவறையில் " என்று தொடங்கும் ஒரு பாடல்போதும், அடிகளது தத்துவம், சைவ சித்தாந்தத் தத்துவமே என்பதற்கு. அதில், " நாங்கள், (உயிர்கள்) இருட்டறையில் அகப்பட்டுக்கொண்ட, கண்ணில்லாத இளங்குழவிகள் போல, ஆணவமலத்தாற் கட்டுண்டு, அறியாமையே வடிவமாய்க் கிடந்தோம் ; அவ்வாறு கிடந்த எங்களை, இறைவனே, நீயே வெளியிற் கொண்டுவந்து போக்குவரவு (இறத்தல், பிறத்தல்) புரியச்செய்து, அதைக் குழந்தைகளது விளையாட்டைத் தாய்தந்தையர் காண்பது போலக் கண்டுகொண்டிருக்கின்றாய் ; ஆடி இளைத்த குழந்தைகளை வீட்டிற் கிடத்தித் தூங்கவைப்பதுபோல, பிறப் பிறப்பில் சுழன்று இளைத்த எங்களை, உனது பேரின்பமாகிய

வீட்டில் வைத்து உறங்கச் செய்வாய்'' என்று கூறியுள்ள பொருளையும், அப்பொருட்கேற்ப, சிராப்பள்ளிக் குன்றில் உள்ள தென்முகக் கடவுளை, “ சித்தாந்த முத்தி முதலே'' என்று அழைக்கின்ற அழைப்பையும் கண்டால், அதன் பின்னரும், தாயுமான அடிகள் கொண்ட தத்துவ நெறி, சைவ சித்தாந்தத்தையன்றி, வேருெரு தத்துவநெறி என்று நினைக்கவும் தோன்றுமோ! மேற்சொல்லிய தத்துவக் கருத்து 'கேவலம், சகலம், சுத்தம்' என்று, ஆன்மாக்களது நிலை களை மூன்ருகப் பகுத்துக் கூறும், சைவ சித்தாந்தமே என் பதை யாரே அறியார்!

'தென்முகம்' என்னும் தலைப்பில் 'சைவ சமய உண் மையே முடிந்த உண்மை' என்பதை மிக வெளிப்படையாக அடிகள் அருளியுள்ளார். நான்முகனைப் பார்த்துக் கேட்பது போல அமைந்தது அப்பகுதி. 'நான்முகனே, நீ உலகத் தைப் படைக்கிருய்; உன் தந்தை காக்கின்ருன்; சிவன் அழிக்கின்ருன்; உங்கள் மூவரில் யார் முதற்கடவுள் என்று எங்களுக்குத் தெரியவில்லை; அதை நீ தெரிவிக்கவேண்டும்' என்று கேட்டுப் பின்பு, 'உலகம் மாயையின் விளைவன்ருே! அதனைப் படைப்பதும், காப்பதும் மாயை இருக்கும்பொழுது தானே! மாயை நீங்கும்பொழுது அந்தச் செயல்கள் நடை பெறுமா? ஆகவே, அழிப்பவன்தானே, மாயை நீங்கிய பின்பும் இருப்பவன்; அதனுல், அழிப்பவனுகிய சிவபெரு மானே முதற்கடவுள் என்பது, அறிஞர் அனைவர்க்கும் உடன்பாடாகின்றது, இந்த அரிய உண்மையை உலகம் அனைத்திற்கும் தந்தையாகிய நீதான் உலகிற்குச் சொல்ல வேண்டும்' என்கின்ருர் அடிகள். இதனைப் பார்த்தபின்பும், அடிகளை, 'சைவ சமயத்தைச் சார்ந்துநின்றவரோ? அல் லரோ?' என ஐயுறுவார் உளரோ?

இவ்வாருயினும், வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை" என்ருற்போல, 'சமரசம்' என்ற ஒரு சொல்லைப் பெரும் பான்மையாக அடிகள் பல இடங்களில் வழங்கியுள்ளார். அதுபற்றிச் சிலர் மேற்கூறியவாறு ஐயுறுதல் உண்டு.

அது, 'வேத நெறியும், சிவாகம நெறியும் வேறு வேறு' என்று மாறுபட வந்திருந்த ஒரு முரண்பாடான கருத்து, நந்தி மரபாகிய திருக்கயிலாய பரம்பரை நிலவுலகில் வந்து நிலைபெற்ற காலத்தில் நீங்கி, இரண்டும் ஒன்றே' எனத் தெளிவிக்கப் பெற்றது என்பதையே காட்டுவதாகும். ஆகவே, அதுபற்றி அடிகள் சித்தாந்த சைவம் அல்லாத பிற நெறியைச் சார்ந்தவரோ என்று ஐயுற வேண்டுவதின்று. அடிகளுக்குக் குருவாய் நின்று ஞானத்தை உபதேசித்தவர் திருமூலர் மரபில் வந்த ஸ்ரீ மௌனகுரு என்பதையும், அவர் அடிகளுக்குத் தெளிவித்தது சிவஞானசித்தி நெறியே என்பதையும், அதுபற்றி அடிகள் ஞானநெறியை, 'சிவஞான சித்திநெறி' என்று பாராட்டிப் பாடுதலையும் நோக்குவார்க்கு, இத்தன்மையான ஐயம் தோன்றுதற்கு இடமே இல்லை.

தாயுமான அடிகள் தம் வாழ்நாள் முழுதும், இப்பிறப்பிலேயே ஆன்ம லாபத்தை அடைந்துவிடுதல் வேண்டும் என்னும் தீவிர உணர்வுடையராய் இருந்து, அதன் பொருட்டு இறைவனைப் பலவாறு பணிந்து மனம் உருகி வேண்டும் பகுதிகளை எடுத்துக்காட்டின், இடம் மிக வேண்டும். இவ்வகையில் அடிகளது பாடல் பக்தி வெள்ளமாய்ப் பரந்து கிடப்பதோடு, பலர்க்கும் உரிய பழகு தமிழாயும் விளங்குகின்றது. அதிலே மேற்காட்டியவைபோல, சைவ சித்தாந்த உண்மைகள் பல விடத்திலும் எளிதில் விளங்கி நிற்கின்றன. இத்தகைய சாத்திர தோத்திரநூல், இப்பொழுது, தருமையாதீனம் 25-ஆவது குருமகாசந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளவர்களது** திருவுளப்பாங்கின்வண்ணம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை மலராக வெளிவந்திருத்தல், சாத்திர தோத்திர வேட்கையுடையார்க்கு அரியதோரு வாய்ப்பாகும். அதனை அருள்வழிப்பெற்று, தத்துவ நெறியால் தத்துவாதீதனைப் போற்றித் தனிப்பெரும் பயனைப் பெறுவோமாக.

உ

குருபாதம்

திருத்தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய
சுவாமிகள் வழங்கியருளிய

அருளுரை

முத்தி நிலை

இந்தனத்தில் அங்கி, எரிஉறுநீர், தேன்இரதம்,
கந்தமலர்ப் போது,வான் கால்ஒளிகண் - சந்ததமும்
அத்துவித மாவதுபோல் ஆன்மாவும் ஈசனுமாய்
முத்தியிலே நிற்கும் முறை.

— குருஞானசம்பந்தர்.

'உயிர்கள் அடையத்தக்க பயன் நான்கு; அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பன என்பதும், அவற்றுள், வீடு என்னும் பயனே எல்லாவற்றினும் மேலான - முடிந்த பயன் என்பதும், அறிவுடையோர் அனைவர்க்கும் ஒத்தமுடிபு. வீடு பேறே முடிந்த பயனாய் இருத்தற்குக் காரணம், அது வரம்பில் இன்பமாய் இருப்பதேயாகும். 'அஃது எவ்வாறு வரம்பில்லாது இருக்கிறது' என்று நோக்கினால், வரம்பில்லாத பொருளினின்றும் விளைவதனாலே, அவ்வின்பம் வரம்பில்லாததாய் இருக்கின்றது.

வரம்பு அல்லது எல்லை என்று சொல்லப்படுவது, 'காலம், இடம்' என்ற இரண்டு பற்றி வருவது.

" கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித் தாளும் அரசினும்
இனியன் தன்அடைந்தார்க்கு இடைமருதனே "

என்னும் திருப்பாடலில், அப்பர் பெருமானார், உலகில் உள்ள இன்பப் பொருள்கள் சிலவற்றை எடுத்துக் காட்டியுள்ளார்.

அவை, 'கனி, கரும்பு, மகளிர், அரசியல்' என்பன. இன்னும் இவைபோன்ற எத்தனையோ பொருள்களைச் சொல்லலாம். அவை அனைத்தையும் நோக்கினால், கால எல்லை, இட எல்லை களை உடையனவாகவே இருக்கும்.

'காலம்' என்பது, 'தோற்றம், நிலை இறுதி' என்ற மூன்றை யும் வகுத்துக்காட்டுவது. முதலில், 'கனி' என்பதை நோக்கு வோம். அது காய் என்ற நிலையில் இருக்கும்பொழுது 'கனி' என்பது இல்லாத பொருளாய் விடுகிறது. இதனை, 'முன் இன்மை, என்பார்கள். இனி, கனி உண்ணப்பட்டு விட்ட பின்பும்' அவ்வாறே இல்லாத பொருளாய் விடுகிறது. இதனை, 'பின் இன்மை' என்பார்கள். எனவே, 'கனி' என்ற ஒருபொருள் உள்ள பொருளாய் இருப்பது எப்பொழுது என்று பார்த்தால், சிறிது காலமே அஃது உள்ள பொருளாய் இருக்கின்றது, மற்றைய காலங்களில் எல்லாம் அஃது இல்லாத பொருளே யாம். ஆகவே, தோற்றமும் இறுதியும் அதற்குக் கால எல்லை களாக அமைய, 'நிலை' என்னும் சிறிது காலத்திற்கு உட்பட்ட சிறிய ஒரு பொருளாகவே ஆகிவிடுகின்றது கனி. எனவே, இந்த நிலையை உடைய கனியை சுவைத்து மகிழும் இன்பம், எவ்வளவு காலத்திற்கு இருக்க முடியும்? ஒரு சிறிது காலத் திற்கேயாம். இப்படியே ஏனைய கரும்பு, பனிமலர்க் குழற் பாவைநல்லார், அரசியல் என்ற அனைத்தையும் பார்த்துக் கொள்ளலாம்.

இனி, காலத்தை விடுத்து இடம்பற்றி நோக்கினால்; அதுவும் அவ்வாறு சிறிதேயாகும். அஃதாவது, கனி என்பது, இன்பம் தரும் பொருளாயினும், அஃது எந்தப் பொறிக்கு இன்பம் தரும்? நமக்கு உள்ள பொறிகள், 'மெய், வாய், கண், மூக்கு, செவி' என ஐந்து; அந்த ஐந்து பொறி களுக்குமே கனி இன்பந்தருகின்றதா? இல்லை; 'வாய் அல்லது நாக்கு' என்கின்ற ஒரு பொறிக்குத்தான், 'சுவை' என்கின்ற ஓர் இன்பத்தை அது தருகின்றது. கனியில் சிறிது நறுமணம் இருப்பினும் அதை நாம் சிறப்பாகக் கருதுவது இல்லை. கனி யினுடைய அழகையும், அதன் வழுவழுப்பு முதலியவற்றையும் அதற்கு உள்ள சுவைபற்றியே நாம் விரும்புகின்றோம். எனவே, ஐந்து பொறிகளில் ஏதோ ஒரு பொறியிடத்தில் தங்கி, கனி நமக்கு இன்பத்தைத் தருகிறது. ஆகவே, அந்தப் பொறியாகிய

ஓர் இடத்தளவில் நிற்பதால், அஃது இட எல்லையும் உடைய தாகின்றது.

இன்னும் ஒருகனி, எத்துணைப்பேர் நாவிற்குச் சுவையைத் தரும்? ஒருகனி ஒருவர் நாவிற்குத்தான் சுவைதரும். ஆகவே, அந்த வகையிலும், அஃது இட எல்லையைப் பெற்றுவிடுகின்றது.

> " கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
> ஒண்டொடி கண்ணே உள "

என்ற திருவள்ளுவர் வாக்குப்படி மகளிர் ஒரே காலத்தில், ஐம்பொறிகளுக்கும் இன்பந் தருபவராகச் சொல்லப்படுவதால், உலக இன்பங்களில் மகளிர் இன்பம் சிறந்ததாகச் சொல்லப் படுகிறது. ஆயினும், ஒருகாலத்தில் ஒருத்தியால் வரும் இன்பம் ஒருவனுக்கேயாகவும், ஒருவனால் வரும் இன்பம் ஒருத்திக்கே யாகவும் இருத்தலால், அவ்வின்பமும், இட எல்லை உடையதே யன்றி வேறில்லை. அதனால், " கனியினும் கட்டிபட்ட கரும் பினும் " என்ற திருப்பாடலில் சொல்லப்பட்ட பொருள் களில், இடைமருதனாகிய இறைவனைத் தவிர, ஏனைய எல்லாப் பொருள்களும் காலத்தாலும், இடத்தாலும் வரையறுக்கப் படும் வரம்புடைய பொருள்களேயன்றி வரம்பில்லாத பொருள் கள் அல்லவாம்.

இனி, மற்றொன்று; உலகப் பொருள்கள் நமக்கு இன்பம் தருவது நேரே அன்று; நா முதலிய ஐம்பொறிகளாகிய புறக் கருவிகள் வழியாகவும், மனம் முதலிய அகக் கருவிகள் வழி யாகவுமேயாம். அகக்கருவிகள் இல்லை என்றால், உலகப்பொருள் களை நாம் அனுபவித்தல் இயலாது. அக்கருவிகளும் காலத் தாலும், இடத்தாலும் ஆகிய வரம்புகளை யுடையன; அன்றியும் அக்கருவிகட்கு உள்ள ஆற்றலும் வரம்பிற்கு உட்பட்டவை. எடுத்துக்காட்டாகக் கூறின், கண் ஓர் அளவிற்கு உட்பட்ட ஒளியையே காணும்; அந்த அளவிற்கு மேற்பட்ட பெரிய ஒளியையோ, அல்லது கீழ்ப்பட்ட சிறிய ஒளியையோ, காணாது, அளவான ஒளியையும் சிறிது நேரமே காணும்; அதற்குமேல் காண இயலாது, நாவும் அளவான சுவையையே சுவைக்கும்; அதையும் சிறிதளவுதான் சுவைக்கும்; அதற்குமேல் சுவைத்தல் இயலாது. அவ்வாறு இயலாத நிலையையே, நாம்,

'தெவிட்டுதல்' என்று சொல்கின்றோம். ஒவ்வொரு புறக் கருவியும் அகக்கருவியும் இப்படிப்பட்டதே.

உலகில் அனுபவிக்கப்படும் பொருள்கள் வரம்புடையன; அனுபவித்தற்கு உரிய கருவிகள் வரம்புடையன; ஆதலின், உலக இன்பம் அனைத்தும் வரம்புடையனவே; அஃதாவது, நில்லாது நீங்குவனவே. ஆதலின், அவை அனைத்தையும், பெரியோர், 'சிற்றின்பம்' என்றே இகழ்ந்து கூறுகின்றனர், இப்படிப்பட்ட வரம்புகள் யாதும் இல்லாத பொருள் எது? பரம்பொருள் - இறைவன். அவனை உயிர்கள் அனுபவிப்பது கருவி கரணங்கள் வழியாக அன்று; நேரேயாம். ஆகவே, அந்த இன்பத்திற்கு ஓர் எல்லை இல்லை. அதனால், அதனையே, 'பேரின்பம்' எனப் போற்றிப் புகழ்கின்றனர் பெரியோர். ஆகவே, அந்த இன்பமே உயிர்கள் பெரும்பேறுகளுள் மேலானது ஆகின்றது. இம்மேலான இன்பத்தைப் பற்றி நாம் நன்கு, உணர்தல் வேண்டும்

வீட்டின்பமாகிய முத்தி நிலையைப் பற்றிப் பல மதத்தவர் பலவாறு கூறுகின்றனர்; அவைகளை எல்லாம் மறுத்து உண்மை நிலையை, சிவஞான சித்தியார் முதலிய பண்டை நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. எனினும், அவற்றிற்குப் பிற்காலத் திலும் சில மாறுபாடுகள் தோன்றின. அவற்றை எல்லாம் நீக்கி, முன்னோர் கூறியதே உண்மை என நிலைநாட்டுதற்கு, எங்கள் ஆதி பரமாசாரிய சுவாமிகள் 'முத்தி நிச்சயம்' என்ற ஓர் அரியநூலை அருளிச்செய்தார்கள். அதற்கு எங்கள் ஆதீன முனிவர்களுள் ஒருவராகிய வெள்ளியம்பலவாணத் தம்பிரான் சுவாமிகள், 'பாடியம்' என்னும் பேருரை வகுத்துள்ளார். இவை களால் எல்லாம் சித்தாந்த முத்திநிலை தெளிவுற விளங்கும்.

பிற மதக் கொள்கைகளில், 'முத்தி நிலையில் ஆன்மா என்பது ஒன்று தனியாய் இருப்பதில்லை; பரம்பொருளில் ஒன்றாய்க் கலந்துவிடும் என்பது ஒன்று. முத்திநிலையில் ஆன்மா இருப்பதே இல்லை என்றால், பேரின்பத்தை அனுப விப்பது எது? உலகத்தில் இருப்பதுபோல, முத்தியில் ஓர் இன்பத்தை அனுபவிப்பது என்பது இல்லை என்று சொன்னால், அதனை 'நிரதிசய இன்பம்' என்று வேதம், ஆகமம் முதலிய நூல்கள் எல்லாம் சொல்வது ஏன்? என்றெல்லாம் வினாக்களை

எழுப்பி, அக்கொள்கையை மறுக்கின்றது சைவ சித்தாந்தம். ஆனல், முத்தி நிலையிலும் ஆன்மா சிவத்தோடு ஒன்ருகாமல். வேருய் இருக்குமானுல், முத்தியை அடைவதற்கு முன் இருந்த நிலைபோலத்தானே ஆகிவிடும். ஆகையால் முத்தியில் ஆன்மா இருக்கிறது என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும். என்று அம் மதங்கள் திரும்ப வினவுகின்றன. அதற்குத்தான், 'முத்தியில் ஆன்மாவும், சிவமும் ஒன்றுமாகாமல், வேறுமாகாமல், அத்துவிதமாய் நிற்கும்' என்று விடை கூறுகின்றது சைவ சித்தாந்தம். ஒன்றுமாகாமல், இரண்டுமாகாமல் இருப்பது எப்படி என்பதைச் சில உவமானங்களால் விளக்கி, முத்தி நிலையை எங்கள் குருஞானசம்பந்தர் தெரிவிக்கும் அரியதொரு வெண்பாவே, மேலே கொடுக்கப்பட்டது.

விறகில் தீ. இருக்கின்றதே அன்றி, இல்லாமற் போகவில்லை; ஆனுல், வேருக நிற்கின்றதா? இல்லை. ஆகவே. விறகும் தீயும் ஒன்றுமல்ல; இரண்டுமல்ல, வெந்நீரில் வெப்பம் இருக்கின்றது. ஆனுல். வேருய்ப் பிரிந்து நிற்பது இல்லை. இவ்வாறே தேனில் தித்திப்பும், மலரில் மணமும், ஆகாயத்தில் காற்றும், கண்ணெளியில் கதிரொளியும் இல்லாமல் இல்லை; ஆனுல், அவை தனித்தனிப் பொருளாய்க் காணப்படுவது இல்லை. அப்படித்தான், முத்தி நிலையில் ஆன்மா, இறைவன் என்ற இருபொருள்களும் இருக்கும்; ஆனுல், இரண்டாய் இருக்கமாட்டா; ஒன்ருய் இயைந்து நிற்கும். இவ்வாறு கலந்து நிற்பதே 'அத்துவிதம்' எனப்படும். இந்த அத்துவிதக் கலப்பு ஆன்மாவிற்கு எல்லையற்ற பரம் பொருளோடு ஏற்பட்டு விடுவதால், அதற்கு எல்லை இல்லாத இன்பம் வாய்த்துவிடுகின்றது. எல்லை இல்லாத இன்பம் வாய்த்து விடுவதால், அதிலிருந்து அது வேறொரு நிலைக்குச் செல்லவேண்டுவது இல்லாமல் போகின்றது. அதனுல், முத்தியைப் பெற்ற ஆன்மா, என்றும் அவ்வின்பத்திலேயே இருப்பதாகும். இது சைவ சித்தாந்தத்திலே விளங்குவதால், இந்த முத்தி, 'சுத்தாத்துவித சித்தாந்த பரமுத்தி' என்று சொல்லப்படுகின்றது. 'சாயுச்சிய பரமுத்தி' என்றும். 'இரண்டறக் கலத்தல்' என்றும் சொல்லப்படுவது இதுவே. இந்த அத்துவித முத்தியைத் தாயுமானவர்,

" ஆணவத்தோடு அத்துவித மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினேடு அத்துவிதம் சாரும்நாள் எந்நாளோ "

என்று பாடுகின்றார். இப்பொழுது நாம் ஆணவ மலத்தொடு அத்துவிதமாய் இரண்டறக் கலந்திருக்கின்றோம். இதுவே பந்தம்-கட்டு. இதைவிடுத்து, இறைவனோடு இரண்டறக்கலந்து விடுவதே மோட்சம்-வீடுபேறு. ஆணவத்தோடு கூடிய நிலையில் உள்ளது, பேரிருள்: பெருந்துன்பம். சிவத்தோடு கூடிய நிலையில் உள்ளது, பேரொளி; பேரின்பம்.

இறைவன் உயிர்களோடு அத்துவிதமாய்க் கலந்திருக்கும் நிலைக்குத் திருநாவுக்கரசர், விறகில் தீ, பாலில் நெய், மணியில் ஒளி என்பவைகளை எடுத்துக்காட்டி இருத்தல் இங்கு நினைவு கூரத் தக்கது.

" விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே "

என்பது அத்திருப்பாடல். வெந்நீரில் வெப்பத்தை,

" நீருறு தீயே! நினைவதேல் அரிய
நின்மலா !

என்று திருவாசகமும்,

" எங்கும் எவையும் எரியுறுநீர் போல்ஏகம்
தங்குமவன் தானே தனி "

என்று திருவருட்பயனும் கூறுவது காணலாம்.

இறைவன் எங்கும் உள்ள பரிபூரணப்பொருள்; ஆயினும், அவனை ஓரிடத்திலும் காணவொட்டாமல் நம்மை மறைத்து நிற்பது, 'ஆணவம்' என்கின்ற மூலமலமும், அது காரணமாக வந்த கன்மத்துக்கிடாகக் கூட்டப்பட்ட மாயா மலமாகிய முப்பத்தாறு தத்துவங்களின் கூட்டமுமேயாகும். இவைகளால் விளைவது அஞ்ஞானமே. இவற்றினின்றும் நீங்கினால், இறைவனது அருளொளியைப்பற்றி அவனை அடைந்து எங்குமாய்

நிற்கும் நிலை உண்டாகும். இந்த நிலையை அடைந்தவர்களே 'பரிபூரணத்தை அடைந்தவர்கள்' என்று சொல்லப்பெறுகின்றார்கள். இதனைச் சிவபோகசாரத்தில் அடுத்த ஒரு வெண்பாவினால், எங்கள் பரமாசாரிய மூர்த்திகள் விளக்குகின்றார்கள்.

" ஆருது தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
வேருக நின்ற இடம்சொல்லின் - மாரு
இருளாய பாவனையற் றெங்குமாய் நின்ற
பொருளேகாண் நீயே புணர் "

இருளாய பாவனை - அஞ்ஞான நிலை. எங்குமாய் நிற்பது, பரிபூரணம். 'நீயே புணர்' என்றது. அதனைத்தான் நீ சென்று அடைதல் வேண்டும் என்பது. எப்படி அடைவது? என்று வினவினால், பல நூல்களில் சென்று அலைய வேண்டுவதில்லை; சிவஞான சித்தியில் ஒருபாடல் - ஒருபாடலில் பாதி பாடல் போதும் என்று அறுதியிட்டு உரைக்கின்றார்கள், எங்கள் குருமூர்த்திகள்;

" ஆருறு தத்துவமும் ஆணவமும் வல்வினையும்
நீருக முத்திநிலை நிற்போர்க்குப்-பேருகப்
பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியிற் சித்தியிலே
ஓர்விருத்தப் பாதிபோ தும்."

'மும்மலங்களும் நீருகி முத்தி உண்டாக விரும்புவோர், அதன் பொருட்டுக் கடல்போலப் பரந்து கிடக்கின்ற நூல்களிலெல்லாம் செல்ல வேண்டுவதில்லை; சிவஞான சித்தியாரில் ஒரு விருத்தத்தில் ஒருபாதியே போதும்' என்கிறார்கள். அந்த விருத்தம், எட்டாம் சூத்திரத்தில் உள்ள, " அறியாமை அறிவகற்றி " என்பதாகும். அதன் முற்பாதியே போதும் என்பது கருத்து. உலகம் இத்தகைய சிவஞான சித்தி நெறியைப் பெற்று, சுத்தாத்துவித சித்தாந்த பரமுத்தியாகிய வரம்பில் இன்பத்தை எய்தி உய்வதாக.

சிறு திருக்கோயில்

கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்,

வித்துவான் திரு. வை. சுந்தரேச வாண்டையார்

நமது அப்பர் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய அடைவுத் திருத்தாண்டகத்தில், பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்னும் கோயில்களின் பெயர்கள் காணப்படு கின்றன. இவைகளுள் பெருங்கோயில் என்பது யானை ஏற முடியாதவாறு படிக்கட்டுக்கள் அமைத்துக் கட்டப்பட்டனவாகும். நன்னிலத்துப் பெருங்கோயில், அம்பர் பெருந்திருக்கோயில் என்பன இவைகளுக்கு எடுத்துக்காட்டுக்கள். இவைகள் மாடக் கோயில்கள் என்றும் கூறப்படும். இப் பெருங்கோயில்கள் கோச்செங்கணன் என்னும் சோழ மன்னனால் கட்டப்பட்டவை. திருநாவுக்கரசுப் பெருந்தகையார் காலத்தில் எழுபத்தெட்டுப் பெருங்கோயில்கள் இருந்தன. இச்செய்தி "பெருக்காறு சடைக் கணிந்த பெருமான் சேரும் பெருங்கோயில் எழுபதினோடெட்டும்" என்னும் அவரது வாக்கால் புலனாகும். (அடைவுத் திருத் தாண்டகம். திருப்பாட்டு ஐந்து.)

திருமங்கை மன்னர் காலத்தில், எழுபது பெருங்கோயில்கள் மாத்திரம் இருந்தன. இச் செய்தி 'எண்டோள் ஈசற்கு எழில் மாடம் எழுபது செய்து உலகாண்டவன்' என்னும் அவர் வாக் கால் அறியக்கிடக்கின்றது.

எனவே, அப்பர் பெருமான் காலத்திலிருந்து, திருமங்கை மன்னர் காலம் வரை, எட்டுப் பெருங்கோயில்கள் அழிந்துபோ யிருக்கவேண்டும்.

பெருங்கோயில் என்று கூறப்பட்டிருப்பதால், சிறு திருக் கோயிலும் உண்டு எனப் பெறப்படுகின்றது. இதற்கு ஏற்பத் தென்னார்க்காடு ஜில்லா சிதம்பரம் தாலுகாவில், சிதம்பரத்தி லிருந்து விருத்தாசலத்துக்குப் போகும் பெருவழியில், (Road)

எறும்பூர் * என்னும் ஓர் ஊர் இருக்கின்றது. அங்குள்ளகோயில் சிறு திருக்கோயில் என்று அக் கோயிலிலுள்ள முதற் பராந்தக சோழ மன்னன் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், சிறு திருக்கோயில் பெருமானடிகள், சிறு திருக்கோயில் பட்டாரர் என்னும் பெயர்களால் அழைக்கப் படுகின்றனர்.

இக் கோயிலைக் கட்டியவன் இருங்கோளன் குணவன் அபராஜிதன் ஆவன். இவன் இச் சிறு திருக்கோயில் பெருமானடிகளுக்கு, திருச்செந்நெல், அர்ச்சனுபோகம் முதலியவைகளுக்கு 3½ வேலி நிலத்தையும் கொடுத்துள்ளான். இக் கோயில் கட்டி முடிவு பெற்ற காலம் முதற் பராந்தகசோழனது இருபத்தெட்டாம் இராச்சிய ஆண்டில் அதாவது (கி. பி. 907+28) கி. பி. 935 இல் ஆகும். எனவே, இக் கோயில் கருங்கல்லால் கட்டப்பட்டு இற்றைக்கு 1030 ஆண்டுகள் ஆகின்றன.

இக் கோயில் இறைவரின் திருப்பெயர் கடம்பவனேசுவரர் என்று இக்காலம் வழங்கப்படுகிறது. இவ்வூரின் பழம் பெயர் உறுமூர் என்பதாகும். இந்த உறுமூர் விக்கிரம சோழன் காலத்தில் விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலம் என்னும் பெயர் எய்திற்று. திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜன் காலத்தில் இந்த விக்கிரம சோழச் சதுர்வேதி மங்கலமாகிய உறுமூர், எறும்பூர் என்னும் பெயர் எய்திற்று. அதுவே இன்றளவும் நிலவுகின்றது.

இவ்வூர்க்கு மேல்பால் சுமார் ஒருமைல் தூரத்தில் பெருவழிக்கு வடபால் வளையமாதேவி என்று ஓர் ஊர் இருக்கின்றது. அவ்வூரின் பழம் பெயர் வளவன்மாதேவி என்பதும், அவ்வூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் திருமாலின் திருப்பெயர் வளவன்மாதேவி விண்ணகர் ஆழ்வார் என்பதும், அவ்வூரில் உள்ள சிவன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் இறைவரின் திருப்பெயர் விஜயங்கொண்ட சோளீஸ்வரமுடையார் என்பதும், இந்த எறும்பூர்க்கோயில் கல்வெட்டுக்களால் அறியக் கிடக்கின்றன.

எனவே சிறு திருக்கோயிலின் அமைப்பு முறையை ஆராய்ந்து வெளியிட விரும்புவார்க்கு இந்த எறும்பூர்க்கோயில் எடுத்துக்காட்டாக விளங்குவதாகும்.

---

* A. R. E Nos. 378 - 398.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthagatesvaraswami Devasthanam, Tirucadaiyur.

இன்று இத்திருத்தலத்திற்கு வந்து ஸ்ரீ அமிர்தகடேசுவரரை யும், ஸ்ரீ அபிராமி அம்மையையும் அர்ச்சித்து வழிபட பாக்கியம் கிடைக்கப்பெற்றேன். நான் இதுதான் முதல்தடவையாக இத் தலத்தைத் தெரிசித்தது. முன்பே நான் கேள்வியுற்றிருந்த புகழுக்கேற்ப, இவ்வாலயம் சுத்தமாகவும், வசீகரமாகவும் நிர்வாகி களாலும் கோவில் இறைபணியாளர்களாலும் வைக்கப்பட் டிருந்ததைப் பார்த்தவுடனே, நம் நாட்டில் உள்ள எல்லாக் கோயில்களும், இம்முறையில் நடாத்திவர இறையருளும் வழிபடு வோரும் துணைசெய்தால், நம்நாட்டுக் கலாசாரத்திற்கே ஓர் எடுத்துக்காட்டாக இருக்கும் என்ற எண்ணம் தோன்றிற்று. கோயில அர்ச்சகர்களும், இதர சிப்பந்திகளும் தல விசேஷங்களை ஊக்கமாக விளக்கியும், இதர வசதிகளும் யாவருக்கும் செய்து கொடுப்பது விசேஷ அம்சமாகும். "ஞானசம்பந்தம்" பத் திரிகை சீரிய அறவுரைகளையும் கட்டுரைகளையும் தாங்கி வருவது போற்றத்தக்கதே.

சென்னை, (ஒ-ம்.) டி. எஸ். நாராயணஸ்வாமி,
30—4—65.] "ஹிந்து" சர்குலேஷன் மானேஜர்.

Sri Sivalogathiagarajaswami Devasthanam, Achalpuram.

காஞ்சிபுரம், சிவதல வழிபாட்டுக் கழகத்தார், மெய்கண்டார் கழகத்தினருடன் 110 அன்பர்கள், தாய்மார்கள், இன்று மாலை விசேடமாக தரிசனம்செய்து இன்புற்றனர், தேவஸ்தான காரியஸ் தர்கள், வெகு சிரத்தையுடன், சுவாமிதரிசனம் செய்துவைத்தமை எங்களால் என்றென்றும் மறக்க இயலாது. திருக்கோயிலின் வனப்பும், வளமும், அமைப்பும் அனைவரின் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்தன. எல்லா அன்பர்களும் தனித்தனியே விபூதிப் பிரசாதப் பொட்டலங்கள் பெற்றுப் பெருமகிழ்ச்சியடைந் தனர். அடியார்கள் அனைவரும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்களின் திருவருளாட்சித் திறத்தைச் சிறப்பித்து ஏத்தி வழிபட்டனர்.

(Sd.) சு. இராமச்சந்திரன்,
26—5—65. டிரஸ்டி, ஸ்ரீ கைலாசநாதர் தேவஸ்தானம்
அமைப்பாளர், சிவதல வழிபாட்டுக் குழுவினர்
சங்கம், காஞ்சீபுரம்.

தருமையாதீனம் திருநெறியதெய்வத்தமிழ் மாநாட்டில்
14—5—65 அன்று

சென்னை மாநில அறநிலயத்துறை ஆணையர்,
திரு. எம். எஸ். சாரங்கபாணிமுதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள்
தொடக்கவுரையாற்றுதல்.

தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாட்டில்
20—5—65 அன்று

மதுரை, தினமணி, பொறுப்பாசிரியர் திரு. V. சந்தானம் அவர்கள்
தொடக்கவுரையாற்றுதல்.

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமி மகோற்சவத்தில்
17—5—65 அன்று



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை புதுவை மாநில முதலமைச்சர் கனம். திரு. வி. வேங்கடசுப்பாரெட்டியார் அவர்கள் தரிசித்தல்.

ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் திருமுன்னர்
ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
21—5—65 அன்று

தஞ்சை இந்துசமய அறநிலையத்துறைத் துணை ஆணையர்
திரு. A. மார்க்கண்டவேல்ராஜ் அவர்கட்குப் பொன்னுடை போர்த்தியும்
திருமுருக. கிருபானந்தவாரியார் அவர்கட்கு 'அமுதமொழிக்கொண்டல்'
என்னும் பட்டம் வழங்கிப் பொன்னுடை போர்த்தியும் ஆசியருளல்.

சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்.

(மலர் 24, இதழ் 6, பக்கம் 341 இன் தொடர்ச்சி)

பதியின் உண்மை இயல்பு

ஆசிரியர் : பதியது பொதுவியல்பினை யாம் உணர்த்திய வாறே நீ உணர்ந்தமைக்கு மகிழ்ச்சி. இனிப் பதியது உண்மை இயல்பினை உணர்த்துவோம்.

உயிர்களின்மீது எழும் திருவருள் மேலீட்டால், இறைவன் ஐந்தொழில் செய்யும் நிலையே அவனது பொதுவியல்பு; ஆகவே, ஐந்தொழிலிற் செல்லாது அவன் தன்னிலையில் தான் நிற்றலே அவனது உண்மை இயல்பாகும். ஒருவனாகிய இறைவன் ஐந்து தொழில்களைச் செய்யுமிடத்து அவற்றிற்கேற்ற வடிவும், பெயரும் கொண்டு வரையறைப்பட்டுப் பலவாகி நிற்பன்; அங்ஙனம் தொழில்செய்தல் இன்றி வாளா இருக்கும்பொழுது, வடிவு, பெயர் ஒன்றும் இன்றி எல்லையற்ற ஒரு பொருளாயே நிற்பன். இதுவே அவனது உண்மை நிலை.

மாணாக்கன் : வடிவுதான், 'நுண்ணியதும், பரியதும், இடைப்பட்டதும்' என்று மூவகைப்படும்; அவை முறையே, 'அருவம், உருவம், அருவுருவம்' என்று சொல்லப்படும்; இறைவன் தனது உண்மை நிலையில், 'அருவம்' என்னும் நிலையில் இருப்பனோ?

ஆசிரியர் : அன்று! அன்று!! அருவமும் வரையறைப் படுவதாகலின், அத்தன்மையும் இல்லாததே இறைவனது உண்மை நிலை.

மாணாக்கன் : 'இறைவனது உண்மை இயல்பு அருவமும் அன்று' எனின், அவன் உயிர்களால் அறியப்படும் பொருளோ? அறியப்படாத பொருளோ? 'அறியப்படாத பொருள் எனின்,

முயற்கொம்பு, ஆகாயத் தாமரை முதலியனபோல, அவனும் இல்பொருளாவதல்லது, உள்பொருளாகான்; ஏனெனில், உள் பொருள் என்றற்குச் சான்று இன்மையின். அதனல், அறியப்படும் பொருள்' என்றே கூறல்வேண்டும்; உயிர்களால் அறியப்படும் பொருள்கள் அனைத்தும், அருவம் முதலிய மூன்றனுள் ஒன்ரு மல்லது, அவற்றுள் யாதொன்றும் ஆகாததில்லை. ஆகவே. இறைவனது உண்மை நிலையை 'அருவம்' என்று கூறுதலே பொருந்துவது போலும்!

ஆசிரியர்: உயிர்களால் அறியப்படும் பொருள்கள் பலவும் அருவம் முதலிய மூன்றனுள் ஒன்ருதல் உண்மையே; ஆயினும், அவைஎல்லாம் அழிபொருளாய் நிற்றலும் உண்மையே யன்ரூ? அதனல். இறைவனும் அம்மூன்றனுள் ஒன்ருய அருவப் பொருளே எனின், அவனும் அழிபொருளாய் விடுவன், ஆதலின், இறைவன் அருவப்பொருளல்லன் என்று அறி.

மாணக்கன்: அங்ஙனமாயின், இறைவன் ஒருவாற்ருனும் அறியப்படாத பொருள்தானே?

ஆசிரியர்: அவ்வாறு நாம் கூறவில்லை; ஏனெனில் யாரும், எக்காலத்தும், எவ்வாறும் அறியாத பொருள் எனின், அதனல், யாருக்கும் யாதொரு பயனும் இன்மையின்.

மாணக்கன்: இறைவன் உயிர்களால் அறியப்படுபவனும் அல்லன்; அறியப்படாதவனும் அல்லன் எனின், இன்னதெனச் சொல்லவாராத பொருளோ?

"இப்படியன்; இந்நிறத்தன்; இவ்வண் ணத்தன்;
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொ ணதே"

என்ருற்போல அருளாளர்களும் இறைவனை அவ்வாறுதானே கூறுகின்ருர்கள்.

ஆசிரியர்: 'இன்னதெனச் சொல்லவாராத பொருள்' என்பது, வெறும் சொல்லளவே யல்லது, பொருளால், அஃது, ஒருவாற்ருனும் அறியப்படாத பொருளாதலன்றி வேறன்ரும். ஆகவே, அவ்வாறு கூறினும், 'ஒருவாற்ருனும் அறியப்படாத பொருள்' என்றதற்குச் சொல்லிய குற்றங்கள் பலவும் உள்ளனவே யாம்.

மாணுக்கன் : இறைவன், இம்மூன்று திறனும் அல்லனுயின், அவன், வேறு எவ்வகையினன்? அருளாசிரியர்களும்,

"எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ!"

என்றே கூறுதலால், இறைவனது நிலை ஐயத்திற்கு உரிய தன்றித் தெளிவிற்கு உரியது அன்று போலும்!

ஆசிரியர் : "இப்படியன் ; இந்நிறத்தன்......என்றெழுதிக் காட்டொணுதே" "எந்தையாரவர் எவ்வகை யார்கொலோ!" என்றற்றொடக்கத்து அருட்டிரு மொழிகட்கெல்லாம் உண்மைக் கருத்து வேருகலின், அவை பற்றி இறைவனை, 'சொல்லொணுத பொருள்' என்ருே, 'ஐயத்திற்குரிய பொருள்' என்ருே கருதி விடுதல் கூடாது.

மாணுக்கன் : மற்று அடிகள் அருளுவது என்னை?

ஆசிரியர் : இறைவன் உயிர்களால் அறியப்படுபவனும் அல்லன் ; அறியப்படாதவனும் அல்லன் ; அறியப்படுபவனுந் தான் ; அறியப்படாதவனுந்தான்.

மாணுக்கன் : அடிகள் கூறும் கூற்று, ஒருதலைப்படாமை (அனேகாந்த வாதம்) ஆதலன்றி, பொருந்தாக்கூற்ருயும் உளது; எவ்வாறெனின், மாறுபட்ட இருதன்மை ஒரு பொருட்கண் இருத்தல் இல்லையாதலானும், அறியப்படுதலும், அறியப்படாமையும் தம்முள் மாறுபட்டவை யாதலாலுமாம்.

ஆசிரியர் ; யாம் கூறியது ஒருதலைப்படாததும் அன்று ; பொருந்தாக் கூற்றும் அன்று என்பதனை விளக்குவோம்,

'இறைவன் உயிர்களால் அறியப்படாதவன்' என்பதற்கு, 'ஏனைய பசு பாசங்களை அறியும் முறையிலே அறியப்படாதவன்' என்பதும், 'அறியப்படுபவன்' என்பதற்கு, 'வேறு முறையில் அறியப்படுபவன்' என்பதும் பொருளாம். ஆகவே, 'அறியப் படுபவன் அல்லன்' என்பதற்கு, 'பசு பாசங்களை அறியும் முறை யில் அறியப்படுபவன் அல்லன்' என்பதும், 'அறியப்படாதவன் அல்லன்' என்பதற்கு, "ஒருவாற்ருனும் அறியப்படாதவன் அல்லன்' என்பதும் பொருளாயின. ஆகவே, அவை ஒருதலைப் படாதனவாதலும், பொருந்தாக் கூற்ருதலும் இல்லை.

மாணாக்கன் : உயிர்கள், பசு பாசங்களை அறியும் முறை யாது? அதற்கு வேறாய் இறைவனை அறியும் முறை யாது?

ஆசிரியர் : 'அருவம், உருவம், அருவுருவம்' என நீ மூவகையாகக் கூறிய அவையே பாசப் பொருள்கள்; அவற்றை, உயிர், கண் முதலிய புறக் கருவிகளையும், மனம் முதலிய அகக் கருவிகளையும் வாயிலாகப் பற்றி அறியும். அவ்வாறு கருவி கரணங்களைப் பற்றிப் புறப்பொருள்களை அறியுமிடத்து உயிர் தனது உண்மை நிலையை அறியாது, தனக்கு வேறாய அப் பொருள்களே தானாக மயங்கி அறியும். அவ்வறிவு, 'பாச அறிவு' அல்லது 'பாச ஞானம்' எனப்படும்; ஏனெனில், அறிதற் கருவி களாகிய அவையும், அவற்றால் அறியப்படும் பொருள்களாகிய புலன்களும் ஆகிய அனைத்தும் பாசமே யாதலின். எனவே, 'பாசத்தைப் பற்றி நின்று, பாசத்தை அறியும் அறிவு பாச அறிவாம்' என்பது பெறப்பட்டது.

இவ்வாறு பாசங்களையே தானாக மயங்கி அறிந்துவரும் உயிர், அறிவு முதிர முதிர, கருவியும் பொருளும் ஆகிய அனைத் தும் சடப்பொருள் (அறிவில் பொருள்) ஆவனவன்றிச் சித்துப் பொருள் (அறிவுடைப் பொருள்) ஆகாமையையும், தான் சித்துப் பொருள் ஆதலையும் அறிந்து, தன்னை அவை அனைத்தினும் வேறாய்க் காணும்: அங்ஙனங் காணுங்கால் கருவி கரணங்களுக் குத் தான் முதல்வனாதலை உணர்ந்து, தன்னையே பதிப்பொரு ளாக மயங்கி அறியும்; அவ்வறிவு, 'பசு அறிவு' அல்லது 'பசு ஞானம்' எனப்படும். ஏனெனில், உயிர் பாசத்துட்பட்ட பசு வாதலின். எனவே, 'பசுவிற்கு மேல் உள்ள பதிப்பொருளை அறிய மாட்டாது, பசுவையே பதியாக அறிந்து நிற்கும் அறிவு பசு அறிவாம்' என்பது பெறப்பட்டது.

பதியாகிய இறைவன், இவ்வாறு பாசத்தையும், பசுவையும் அறியும் முறையில் அறியவாரான் ஆகலின், 'அவன் உயிர்களால் அறியப்படும்பொருள் அல்லன்; அறியப்படாத பொருளே' என்பதற்கு, 'பாசஞான பசுஞானங்களால் அறியப்படுபவன் அல்லன்' என்பதே பொருளாம். ஆகவே,

"இப்படியன்; இந்நிறத்தன்; இவ்வண்ணத்தன்;
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே"

என்றாற்போலும் திருமொழிகட்கு, 'பாசஞான பசுஞானங்களுக்கு அகப்படாதவன' என்பதே கருத்தாதல் தெளிவு.

உயிர்கள் பெரும்பான்மையும் அறிவது பாசங்களையே ஆத லாலும், அப்பாசங்கள், 'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் மூன்று கூற்றன ஆதலாலும், இறைவனது தன்மை அம் முக்கூற்றினுள் ஒருகூற்றினும் படாதது ஆதலாலும், அத் தன்மையையே,

"எந்தை யாரவர் எவ்வகை யார்கொலோ"

என்றாற்போல வியந்தருளுவர், அருளாசிரியர். ஆதலின், அத் தன்மையவான திருமொழி பற்றியும் ஐயம் இன்றாம்.

இறைவனை, 'மன வாக்குக்களைக் கடந்த கடவுள்' என்று கூறுவதிலும், 'மனம்' என்பது பசுஞானத்தையும், 'வாக்கு' என்பது பாசஞானத்தையுமே குறிக்கும் என்று உணர்.

இறைவன் இவ்வாறு பாசஞான பசுஞானங்களால் அறியப் படானாயினும், பதிஞானத்தால் அறியப்படுவான்; ஆதலின், 'அறியப்படாத பொருளல்லன்; அறியப்படுபவனே' என்பதற்கு. 'பதிஞானத்தால் அறியப்படுபவன்' என்பதே பொருளாம். ஆகவே, மேல் யாம் கூறியது ஒருதலைப்படாததோ, அன்றி மாறுகோள் உரையோ ஆகாமை அறிந்துகொள்;

மாணக்கன்; அங்ஙனமாயின், 'பதிஞானம்' என்பது யாது? அதனை அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர்: உயிர், தான் அறிவுடைப் பொருளாதலை அறிந்த விடத்து அவ்வறிவு, தானே அறியும் அறிவாய் இல்லாது, அறிவிப்பதொரு பொருளால் அறியும் அறிவாய் இருத்தலை உணரும். அவ்வகையில், கண் முதலிய புறக் கருவிகளும், மனம் முதலிய அகக் கருவிகளும் முடவனுக்குக் கோல்போல நின்று உதவவே அறிந்துவருதல் கண்கூடு. ஆனால், அக்கருவிகள் நாமல்ல என்று அவற்றினின்றும் நீங்கிய பின்னர் உயிர் தன்னைத்தான் அறிகின்ற நிலை உண்டாகின்றது. அந்நிலையில் கருவிகள் இல்லையாய் நீங்கவும், தனக்கு ஓர் அறிவு உண்டாதல் எவ்வாறு என்று ஊன்றி நோக்கின், தன் அறிவுக்கறிவாய் நிற்கும் பதிப்பொருளினது அறிவு புலனாவதாகும். அதுவே, 'பதிஞானம்' எனப்படுவது. ஒருவாறு புலப்பட்ட அப்பதி ஞானத்தை விடாது பற்றி நின்று, முன்கண்டு கழித்த பாச ஞானத்தில் செல்லாது நின்றால், அந்த பதிஞானத்திற்கு பதிப் பொருள் இனிது விளங்குவதாகும். இதனையே, "அவனருளாலே

அவன்தாள் வணங்கி" என்று அனுபூதிமான்கள் அருளிச் செய்கின்றார்கள். நாவுக்கரசரும்,

"அவன் அருளே கண்ணாகக் காணின்அல்லால்
……… காட்டொணாது"

என்று அருளிச்செய்தமையால், அவன் அருளே கண்ணாகக் காணின் காணலாம் - காட்டலாம் என்பது பெறப்படுகின்றது. இதனையே,

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணினிற் சிந்தை நாடி"

என்று சிவஞானபோதமும்,

"பாசஞா னத்தாலும் பசுஞானத் தாலும்
பார்ப்பரிய பரம்பரனைப் பதிஞானத் தாலே
நேசமொடும் உள்ளத்தே நாடி"

என்று சிவஞான சித்தியாரும் கூறுகின்றன. எனவே, 'இறைவனது உண்மை நிலை அருவத்தையும் கடந்தது' என்பதும், 'அது பாசஞான, பசு ஞானங்களால் அறியப்படாது, பதிஞானத்தால் அறியப்படும்' என்பதும் பெறப்படும்.

(தொடரும்)

குமரகுருபரன் — ஆண்டுச் சந்தா 1 — 50 —

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல் வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

விலாசம் : நிர்வாக ஆசிரியர், உயர்திருவாளர்.

T. M. குமரகுருபரன் பிள்ளை B. A., B. L., அவர்கள்,

"குமரகுருபரன்" ஆபீஸ் ஸ்ரீவைகுண்டம்.

தொல்காப்பியச் சொல்லதிகார - - - விளக்கக் கட்டுரைகள்.

பண்டித வித்துவான், திரு. கு. சுந்தரமூர்த்தி

(மலர் 24, இதழ் 4, பக்கம் 212 இன் தொடர்ச்சி)

8. உரியியல்

1. முன்னுரை :-

இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரையும் வினையையும் சார்ந்து வருதலின் பெயர் வினையை அடுத்து இடை உரியை நிரலே கூறுகின்ற ஆசிரியர் உரிச்சொற்களை இவ்வியலில் உணர்த்துதலின் மேலை இயலோடு இது இயைபுடைத்தாயிற்று.

2. பெயர்க்காரணம் :-

இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருட்குத் தாமே உரியவாகலின் உரிச்சொல் என்பர். பெரும்பான்மையும் செய்யுட்குரித்தாய் வருதலின் உரிச்சொல்லாயிற்று என்பாரும் உளர். 'செய்யுட்குரியன உரிச்சொல்' என்ற நன்னூலும் காண்க.

3. உரிச்சோல்லின் இலக்கணம் :-

இது இசை, குறிப்பு, பண்பு ஆகிய மூன்று பொருள்பற்றி வரும். இசை - செவியாலுணரப்படுவது. குறிப்பு - மனத்தால் குறித்துணருவது. பண்பு - ஐம்பொறிகளால் உணரப்படுவது. இவை பெயரையும் வினையையும் சார்ந்து வரும். அங்ஙனம் வருங்கால் பெயர்ச்சொல் போன்றும் வினைச்சொல் போன்றும் வரும்; அவற்றிறகு முதனிலையாகவும் வரும். அவை ஒரு சொல் ஒரு பொருளுக்கு உரியதாயும், ஒரு சொல் பல பொருளுக்கு உரியதாயும் பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாயும் வரும். வழக்கில் பயிலாத உரிச்சொற்களுக்கு வழக்கில் பயின்ற சொற்களைக் கொண்டே பொருள் உணர்த்தப்படும் (1). நன்னூலாரும்.

" பல்வகைப் பண்பும் பகர்பெய ராகி
ஒருகுணம் பலகுணந் தழுவிப் பெயர்வினை
ஒருவா செய்யுட் குரியன வுரிச்சொல் " (உரி : 1)

எனக் கூறுதல் காண்க.

4. இவ்வியலில் நுவலப்படும் உரிச்சொற்கள் :-

பொருள் எளிதில் விளங்கும் உரிச்சொற்களை எடுத்துக் கூறுவதால் பயனில்லை. ஆதலின் பொருள் எளிதில் விளங்காத உரிச்சொற்களே இவ்வியலிற் கூறப்படும் (2).

மேல் உரிச்சொற்கள் இசை, குறிப்பு, பண்பு பற்றி வருமென்றார் ; அவற்றுள் குறிப்புப்பற்றி வருவன மிகுதியாய் இருத்தலின் அதனையே முதற்கண் கூறுவாராயினர். இசை குறிப்பு பண்பு ஆகிய மூன்று வகையால் வரும் உரிச்சொற்களைப் பின் வருமாறு வகுத்துக் கொள்ளலாம். (அ) ஒரு சொல் ஒரு பொருட்குரியது. (ஆ) ஒரு சொல் பல பொருட்குரியது. (இ) பல சொல் ஒரு பொருட்குரியன. இம்முறையில் உரிச்சொற்கள் வகுத்துரைக்கப்படும்.

(1) குறிப்புப்பற்றி வருவன

(அ) ஒருசொல் ஒருபொருட்குரியது :-

உரு - உட்கு (அச்சம்) (4), புரை - உயர்பு (4)
மல்லல் - வளன் (7), ஏ - பெற்று (பெருக்கம்) (8)
உகப்பு - உயர்தல், உவப்பு - உவகை (9)
பயப்பு - பயன் (10), இயைபு - புணர்ச்சி (12)
சீர்த்தி - மிகுபுகழ் (16), மாலை - இயல்பு (17)
பழுது - பயமின்மை (பயனின்மை) (28), முழுது - எஞ்சாமை (30)
வம்பு - நிலையின்மை (31), மாதர் - காதல் (32)
புலம்பு - தனிமை (35), துவன்று - நிறைவு (36)
முரஞ்சல் - முதிர்வு (37), பொற்பு - பொலிவு (39)
வறிது - சிறிது (40), எய்யாமை - அறியாமை

எய்த்தல் என்பதன் எதிர்மறையே எய்யாமையாகும். ஆயினும் சேனாவரையர் " அறிதற் பொருட்டாய் எய்தலென்றானும் எய்த்தலென்றானும் சான்றோர் செய்யுட்கண் வாராமையின், எய்யாமை எதிர்மறை யன்மை யறிக" எனக் கூறினார்.

ஆனல் நச்சினர்க்கினியர் இதனை மறுத்துக் கூறுவர். அது வருமாறு :- "அறிதல் என்னும் உடம்பாட்டிற்கு மறையாகிய அறியாமை என்னும் உரிச்சொல்லான் எய்யாமையை உணர்த் தவே, அவ் எய்யாமை மறைச்சொல் என்பதூஉம், அதற்கு எய்தல் என்னும் உடம்பாட்டுச் சொல் உளது என்பதூஉம் பெற்ரும். அவ்வுடம்பாட்டை ஓதாது மறையை ஓதினர், மறைச் சொல்லும் உரிச்சொல்லாய் வரும் என்றற்கு, 'எய்த்து நீர்ச்சிலம்பின்குரை மேகலை' என்புழி எய்த்து என்பது அறிந்து என்னும் பொருள் உணர்த்திற்று" என்பர். இதுவே பொருத்த முடையதாம் (46).

நன்று - பெரிது (47), தெவு - கொளல் (49)

தெவ்வு - பகை (50), [1]கழுமு - மயக்கம் (55)

கருவி - தொகுதி (58), கமம் - நிறைவு 59)

அரி - ஐம்மை (மென்மை) (60), கவவு - அகத்தீடு (61)

இரங்கல் - [2]கழிவு (63), கவர்வு - விருப்பு (66)

சேர் - திரட்சி (67), வியல் - அகலம் (68)

வய - வலி (70), துயவு - அறிவின் திரிபு (72)

உயா - உயங்கல் (வருந்தல்) (73), உசா - சூழ்ச்சி (74)

வயா - வேட்கைப்பெருக்கம்.

ஈண்டு வேட்கைப்பெருக்கம் என்றது பொதுவாக ஒரு பொரு ளின் கண் தோன்றும் விருப்பத்தை உணர்த்துகின்றதென இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் குறிக்க, நச்சினர்க்கினியர் மட்டும் "ஈண்டு வேட்கை என்றது, கருப்பம் தங்கி வருத்த முற்று நுகரப்படும் பொருள்மேல் செல்லும் வேட்கையை" எனக் கூறுவர். அதுவே பொருத்தமுடையதாம் (75).

புனிறு - ஈன்றணிமை (79), யாணர் - புதிதுபடற் பொருள் (83)

அமர்தல் - மேவல் (84), [3]யாண் - கவின் (85)

---

[1] 'கழும்' எனக் கொள்வர் நச்சினர்க்கினியர்.

[2] இது ஒரு பொருளது கழிவால் பிறந்த வருத்தத்தைக் குறிக்கும்.

[3] 'யாணு' எனக்கொள்வர் தெய்வச்சிலையார்.

ஐ - வியப்பு (89), முனைவு - முனிவு (90)

வை - கூர்மை (91), எறுழ் - வலி (92)

நனி - செறிவு (27)

(ஆ) ஒருசோல் பல போருட்குரியது :-

[1] 'ஏற்றம்' என்பது நினைவு, துணிவு என்ற பொருள்களையும் (41), 'பணை' என்பது பிழைத்தல், பொருப்பு (பெருத்தல்) என்ற பொருள்களையும் (43), 'படர்' என்பது. [2] உள்ளல், செலவு என்ற பொருள்களையும் (44), 'தா' என்பது வலி, வருத்தம் என்ற பொருள்களையும் (48), 'விறப்பு' என்பது செறிவு, வெருவுதல் (அஞ்சுதல்) என்ற பொருள்களையும் (51, 52), 'அழுங்கல்' என்பது இரக்கம், கேடு என்ற பொருள்களையும் (54), [3] 'விழுமம்' என்பது சீர்மை, சிறப்பு, இடும்பை என்ற பொருள்களையும்(57), 'நனவு' என்பது களன் (இடம்), [4] அகலம் என்ற பொருள்களையும் (80), 'மத' என்பது மடன், [5] வலி, மிகுதி, வளப்பு என்ற பொருள்களையும் (81), 'கடி' என்பது வரைவு, கூர்மை, காப்பு, புதுமை, விரைவு, விளக்கம், மிகுதி, சிறப்பு, அச்சம், ஐயம், முன்தேற்று (புறத்தின்றி தெய்வம் முதலாயினவற்றின் முன்னின்று தெளித்தல்) என்ற பொருள் களையும் குறிக்கும் (87). இவற்றுள் முன்தேற்று, ஐயம் ஆகிய இரண்டினையும் நீக்கி, விரை, மன்றல், ஆர்த்தல் என்ற மூன்றனை யும் கூட்டி 'கடி' என்பது பதின்மூன்று பொருளில் வருமென்பர் நன்னூலார்.

---

[1] 'ஏற்றம்' என்பதே உரிச்சொல் என்பர் நச்சினார்க்கினியர்.

[2] வருத்தத்தோடும், வருத்தமின்றியும் உள்ளலும் செலவும் வரு மென்பர் நச்சினார்க்கினியர்.

[3] 'விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்' - என்பது இளம் பூரணர் பாடம். 'விழுமம், சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்' - என்பது தெய்வச்சிலையார் பாடம். இதுவே சிறப் புடைத்து.

[4] அகலம் என்னும் பொருளைக் குறிக்கும் உரிச்சொல்கள் 'வியல்' 'நண' என்பன.

[5] வலி என்னும் பொருளைக் குறிக்கும் உரிச்சொற்கள் 'மத' 'வய', 'எறுழ்', 'தா' என்பன.

(தொடரும்).

தமிழ் கூறு நல்லுலகம்

திரு. அ. கலியபெருமாள், எம். ஏ.,

(மலர் 24, இதழ் 4, பக்கம் 216 இன் தொடர்ச்சி)

இரவில் புகாரின் பட்டினப்பாக்கத்தின் ஊடே ஏகினல் எத்தனையோ வகை விளக்குகளைக் காணலாம். பண்டகசாலையில் இட்ட விளக்குகளும் நம் பார்வையிலிருந்து தப்ப முடியாது. மிகப் பெரும் பண்டங்களை உடைய சோனுயர் வரைப்பினைக் காப்பார் இட்ட விளக்குகள் அவை.

"கழிபெரும் பண்டங் காவலர் விளக்கமும்"

(கடலாடு காதை 144)

பண்டகசாலையில் உள்ள பொதிகளில் அவற்றின் அளவும் நிறையும் எண்ணுமாகிய இலக்கங்களும் 'இது இன்னுருடையது' என்ற செய்தியும் பொறிக்கப் பெற்றிருந்தன.

"வம்பமாக்கள் தம் பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப்பல்பொதிக்
கடைமுக வாயில்"

(இந்திர விழவூரெடுத்த காதை. 111-13)

வலிய கலங்களையும் வானுயர் பண்டகசாலையையும் பெற்றிருந்த தமிழர் கடல் வாணிகத்தைத் திறம்பட நிர்வாகித்தனர். வாணிகப் பொதியின் மீது அளவினையும் நிறையினையும் குறித்து 'இப்பொதி இவருடையது' என்பதையும் பொறித்துவைப்பதை முன்பு கண்டோம். இறக்கப்படும் பொருள்களுக்கும் ஏற்றப் படும் பொருள்களுக்கும் சுங்கம் கொண்டனர். இதனை 'உல்கு' என்று இலக்கியம் குறிக்கிறது. பண்டங்களைப் பார்வையிட்டுப் புலி முத்திரை பொறித்தனர் என்பதை

'வலியுடை வல்லணங்கினேன்
புலிபொறித்துப் புறம்போக்கி'
(பட்டினப் 134-35)

என்னும் அடிகளால் அறிகிறோம்.

பண்டங்களைச் சுங்கம் கொண்டபின்னரே கலங்களில் ஏற்ற அனுமதித்தனர். கலங்களிலிருந்து இறங்கும் பண்டங்களிலும் புலி பொறித்து உல்கு செய்த பின்பே வெளியே எடுத்துச்செல்ல அனுமதித்தனர். சுங்கம் கொள்வோர் மிகத் திறம்படத்தம் தொழிலைப் புரிந்து வந்தனர், நாடுகாக்கும் காவலன் பொருளைப் பிறர் கொள்ளாமல் நன்கு காக்கும் பழம்புகழ் வாய்ந்த சுங்கம் கொள்வோர் என்று இவர்கள் பட்டினப்பாலையில் பாராட்டப் படுகின்றனர். செங்கதிரோன் நேற்றும் வந்தான். இன்றும் வருகின்றான்; நாளையும் வருவான். இனி என்றும் வருவான். பகலவன் ஏறிய தேரை இழுத்துச் செல்லும் பரிமாக்கள் சோம்ப லறியாதவை. காலமெல்லாம் கதிரவன் தேரை இழுத்தும் களைப்படையவில்லை. அவை போன்றே அயராது சுங்கம் கொள் வார் தம் தொழிலைச் செய்கின்றனர். கடமை ஒன்றே அவர்கள் கருத்திலிருப்பது. ஆற்றும் வினையில் தாமதம் என்றும் அணு வளவும் இல்லை,

"நல்லிறைவன் பொருள் காக்கும்
தொல்லிசைத் தொழில்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மாஅ போல
வைகல்தொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைவுபடாது' (பட்டினப். 120-25)

நீரின்வழியாகவும் நிலத்தின் வழியாகவும் வந்த பொருள்கள் யாவும் தமிழகத்து நகரங்களின் அங்காடி வீதிகளில் குன்றுபோல் செறிந்திருந்தன. தென்கடல் முத்தை எவ்விடம் தெரிந்தெடுப் பது? கங்கைவாரியை எங்கே காண்பது? குணகடல் துகிர் குவிக் கப்பட்டிருக்கும் இடம் இதுவோ; குடமலைச் சந்தை விலை கூறும் இடம் அதுவோ' என்றெல்லாம் வேண்டும் பொருள் விலைகூறும் இடம் பற்றிக் குழம்ப வேண்டியதில்லை "இவ்விடத்தில் இன்ன பொருள் கிடைக்கும்" என்று அறிவிக்கும் கொடிகள் எடுக்கப் பட்டன. காவிரிப்பூம்பட்டினத்து ஒழுங்குபட்ட சேரிகளில்

கடைவீதிகளில், கலத்தால் பெரும் பொருள் பெற்ற பரதேசிகள் பல்வகைக் கூலங்களை குவித்திருக்கின்றனர். "இங்கு இன்ன சரக்குளது" என்று கொலுயெடுத்துக் கூறுகின்றனர்.

'கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
வேலைவாலுகத்து விரிதிரைப் பரப்பில்
கூலமறுகில் கொலுயெடுத்து நுவலும்
மாலைச்சேரி' (சிலம்பு. கடலாடுகாதை 130-33)

பல்வகைக் கொலுகளின் நிழலில் இருக்கும் பைம்பொன் மிக உடைய கடைவீதியைப் பதிற்றுப்பத்தில் பார்க்கின்றோம்.

'கொலுநிழற் பட்ட பொன்னுடை நியமம்'

(பதிற்று 30)

கடைத்தெருக்களில் கள், ஊன் முதலியன விற்பது குறித்துக் கொலுகள் எடுப்பதோடு, வெற்றி குறித்தும் விழாக் குறித்தும் கொலுகள் எடுப்பது பண்டைக்கால வழக்கம். அத்தகைய கொலுகள் எண்ணரியவாய் விண்ணை அளாவிப்புகார் நகர அங்காடி வீதிகளில் பறந்து கொண்டிருந்தன. அவைகளின் நெருக்கத்தால் ஆதவன் கதிர்களும் உள்ளே நுழைய முடிய வில்லையாம். பட்டினப்பாலையில், உருத்திரங்கண்ணனார் பார்த்து வியக்கிறார்,

'பல்வேறு உருவின் பதாகை நீழல்
செங்கதிர் நுழையாச் செழுநகர் வரைப்பு'

(பட்டினப் 182-83)

தமிழ்நாட்டு நகரங்களின் அங்காடி வீதிகளுள், புகாரின் ஆவணமறுகும், கூடல் மாநகர் பீடிகைத்தெருவும் தனிச்சிறப்பு வாய்ந்தவை. இரு நகரங்களிலும், பகலில் நடைபெறும் நாளங் காடியும், இரவில் இயங்கும் அல்லங்காடியும் முட்டாச் சிறப்பின் வாணிக வளத்தைக் காண்போம்.

புகார் நகரத்துக் கடைவீதிகளில் கிடைக்கப்பெறாத பொருளே இல்லையென்று சொல்லலாம். பாடை வேறுபட்ட மாக்களையும், பல்வகைப் பண்டங்களையும் அங்கே காணலாம்.

அலைவழி வந்த அரும்பெறற் குதிரைகள் நின்று கொண்டிருக்கின்றன. காற்றால் உந்தப் பெற்றுக் கரை சேர்ந்த கலம் தந்த மிளகுப் பொதிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. கண்களைக் கூசச்செய்யும் மணியும் பொன்னும் வடமலை கண்டவை. மணக்கும் ஆரமும் அகிலும் குடமலை தந்த வளம். தென்கடல் பிறந்த முத்து சிரிக்கிறது. சிறந்திடும் துகிர், குணகடலின் திரு. கங்கைப் பொருள்களையும் காவிரிப் பொருள்களையும் காணக் கண்கள் போதா. இதோ ஈழத்துணவு, அதோ காழகத்தாக்கம். அருமையும் பெருமையும் வாய்ந்த பொருள்கள் எத்துணை எத்துணை! பட்டினப்பாலையில் உருத்திரங் கண்ணனார் பகர்வதைக் கேளுங்கள்.

" நீரின்வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின்வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கைவாரியும் காவிரிப் பயனும்
ஈழத் துணவும் காழகத் தாக்கமும்
அரியபெரியவும் நெரிய ஈண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகு "

(பட்டினப். 185-193)

சிலம்பில் புகார் நகரத்து நாளங்காடி சிறப்பாகப் பேசப் படுகிறது பண்டங்களைக் கொடுப்பார் ஓசையும் அவற்றைக் கொள்வார் ஓசையும் இடையறாது நிலைபெற்று விளங்குவது என்பதை,

" கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி "

(இந்திர விழவூரெடுத்த காதை 62-65)

என்னும் அடிகள் விளக்கும். நாடோறும் மகிழ்ந்திருக்கும் இருப்பினை உடையது, நாளங்காடி. "நாண்மகிழ் இருக்கை நாளங்காடி" (இந்திர. 196) என்று இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். ஆறுகிடந்தன்ன அகன்ற ஆவண வீதிகளில் என்றும் விழாக்கள் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் "விடிவரு வியலாவணம்" என்று பட்டினப்பாலை அழைக்கிறது.

(தொடரும்)

சஹஸ்ராகமம்

சிவாகம வித்துவான்

திரு. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 24, இதழ் 5, பக்கம் 313 இன் தொடர்ச்சி)

निक्षिपेत्तण्डुलं पात्रे कौतुक द्वय संयुतम ।
भसितं नालिकेरं च तांबूलं च समन्वितम ॥ 519

क्रमेण द्रव्यानभ्यर्च्य कौतुकेतूरगानून्यसेत् ।
संपातं च हुनेद्विद्वान्वाद्य घोषसमन्वितम ॥ 520

वृह्म घोष समायुक्तं मूललिङ्गान्तिकं व्रजेत् ।

ஒரு தாம்பாளத்தில் தேங்காய், தாம்பூலம், பழம், விபூதி, இரண்டுகாப்பு (சுவர்ணகாப்பு - நூல்காப்பு) வைத்து முற்கூறிய பூஜைமுறைப்படி அர்ச்சித்து விபூதியில் லகுளீசனையும், காப்பில் அஷ்டநாகங்களையும் பூஜித்து அக்னிகாரியம் ஹோமம் செய்து சம்பாதஹோமம் செய்து வாத்யங்கள் முழங்க, மூலலிங்கத்திற்கு ரக்ஷாபந்தனம் செய்யவேண்டியதன் பொருட்டு மூலஸ்தானத்திற்குச் செல்லவேண்டும்.

तैलाभ्यङ्गं तथा देवे कुर्याद्धीमान्विशेषतः ॥ 521

पञ्चगव्येन संस्नाप्य लिङ्गपीठान्तरं क्रमात् ।
अष्टमृत्सलिलैश्चैव काषायैश्शान्ति कुंभकैः ॥ 522

पञ्चपल्लव बिल्वैश्च प्रत्येकमभिषेचयेत् ।
चन्दनाद्यैर्विलिप्याऽथ रक्षासूत्रं प्रबन्धयेत ॥ 523

இவ்வாறு மூலலிங்கத்திடம் சென்று விசேஷமாக எண்ணைக் காப்பிட்டு, சாந்திகும்ப ஜலத்தினாலும் பஞ்ச பல்லவோதகங்களாலும், வில்வோதகங்களாலும் தனித்தனியாக அபிஷேகம்

செய்யவேண்டும், பிறகு சந்தனம், பச்சகற்பூரம், குங்குமப்பூ முதலியவைகளால் இலிங்கத்திற்கு லேபனம் செய்து ரக்ஷாபந்தனம் செய்யவேண்டும்.

एवं रात्रौ प्रकर्तव्यं प्रभाते स्नानमाचरेत् ।
गर्भगृहं ततः प्राप्य कृत्वा पुण्याहप्रोक्षणम् ॥ 524

व्यपोह्योषित पुष्पाणि कौतुकं वस्त्रसंयुतम् ।
अभिषेकं ततः कुर्यादुपचाराणि कल्पयेत् ॥ 525

இவ்வாறு இரவில் செய்துமுடித்து காலையில் ஆசாரியன் ஸ்நானம் அனுஷ்டானம் முதலிய காரியங்களைச் செய்துமுடித்து கர்ப்பக்கிரஹத்திற்குச் சென்று புண்யாகவாசனம் ப்ரோக்ஷணம் செய்து, பழைய புஷ்பங்களைக் களைந்து, ரக்ஷாசூத்திரம் வஸ்திரம் இவைகளுடன் அபிஷேகம் செய்து நைவேத்யம் முதலிய உபசாரங்களைச் செய்யவேண்டும்.

अध्वषट्कं च विन्यस्य अष्टत्रिंशत्कलांन्यसेत् ।
मंत्रन्यासं ततोन्यस्त्वा धूपदीपादिकं यजेत् ॥ 526

வர்ணாத்வா, பதாத்வா, மந்த்ராத்வா, புவனாத்வா, தத்துவாத்வா, கலாத்வா என்ற ஆறு அத்துவநியாஸம் செய்து அஷ்டத்ரிம்சத்கலா நியாஸத்துடன் மந்திர நியாஸங்களையும் செய்து தூபதீபம் கொடுக்கவேண்டும், ஷடத்வாவென்பது மிகவும் இன்றியமையாதது. கலாத்வா என்பது ஐந்து. இவை இறைவனுக்கு சிரசு, முகம், மார்பு, நாபி, பாதம் என்ற உறுப்புக்களாக இருக்கின்றன. நிவிருத்திகலை என்பது முழங்கால் வரையிலும், பிரதிஷ்டைகலை என்பது நாபி வரையிலும் வித்யா கலை என்பது கழுத்துவரையிலும் சாந்தி கலை என்பது நெற்றி வரையிலும் சாந்தியதீத கலை என்பது நெற்றிக்குமேல் உள்ள பாகம் பூராவும் வியாபகமாகவுள்ளதாகும். புவனாத்வா என்பது இருநூற்று இருபத்துநான்கு ஆகும். இவை, இறைவனுக்கு உரோமமாகும். தத்துவாத்வா என்பது முப்பத்துஆறு. இவை இறைவனுக்கு எலும்பு என்ற தாதுவாகவும், மஜ்ஜை சுக்லம் என்ற தாதுக்களாகவும் ஆகும், வர்ணாத்வாவென்பது ஐம்பத்து ஒன்று. இவை இறைவனுக்கு த்வக் (தோல்) என்ற தாதுவாகும். மந்திராத்வா பதினொன்று. இவை, இறைவனுக்கு குருதி என்ற தாதுவாகும், பதாத்வா எண்பத்துஒன்று. இவை இறைவனுக்கு மாம்ச தாதுவாகும். இவ்வாறு இந்த ஆறு

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் மகோற்சவத்தில்
15—5—65 அன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள்



சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம், திரு. R. சதாசிவம் B. A., M. L., அவர்களுக்குப் பொன்னுடை போர்த்து ஆசியருளல்.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச்
சொந்தமான
கருங்குயில்நாதன்பேட்டை ஸ்ரீ சக்திபுரீஸ்வரசுவாமி
தேவஸ்தானத்தில்



மகா கும்பாபிஷேகக் காட்சி.

அத்வாக்களால் இறைவனுக்கு வித்யாசரீரத்தை கற்பிக்க வேண்டும். இதுபோலவே இறைவனுக்குக் கற்பிக்கப்பட்ட வித்யா சரீரத்தில் வெளியில் காணப்படும் ஹ்ருதயம், நாபி புஜம், பாதம் ஜாநு விரல் முதலிய அங்கங்களையும்அஷ்டத்ரும்சத் கலாதியாஸங்களால் கற்பிக்கவேண்டும். (இறைவனுக்கு இயற்கையாக சரீரம் கிடையாது ஆதலால் மந்திரங்களால் கல்ப்பிக்கப்பட்ட சரீரத்தில் இறைவனை ஆவாகனம்செய்யவேண்டும்.)

यागशालां पुनर्गत्वा ऋत्विग्भिः परिचारकैः ।
यागपूजाप्रकारेण शिवं सांगं प्रपूजयेत् ॥ 527

अग्निं प्रज्वाल्य संपूज्य होमं पूर्ववदाचरेत् ।

பிறகு ஆசாரியன் ருத்விக்குகளுடனும் பரிசாரகர்களுடனும் கூட யாகசாலைக்குச்சென்று முன்போல் யாகபூஜைகளை முறைப்படி சாங்கோபாங்க ப்ரத்யங்கத்துடன் செய்து கும்பத்திலிருக்கும் இறைவனை பஞ்சாஸன பஞ்சாவரணமார்க்கமாய்ப் பூஜித்து அக்னியை ஜ்வாலை செய்து அதில் முன்போல் ஹோமம் செய்யவேண்டும்.

प्रायश्चित्तं पुरा कृत्वा जयादिं जुहुयात्ततः ॥ 528
भूरादींश्च शिरसा पूर्णं हुत्वा विधानतः ।

முதலில் ப்ராயச்சித்தாகுதிகளைச் செய்து, ஜயாதி அப்யாதானம் ராஷ்ட்ரப்ருத் முதலிய ஹோமங்களையும் செய்து, சிரோ மந்திரத்தினல் பூர்ணுகுதியையும் செய்து பூராதி ஹோமம்செய்ய வேண்டும். (சிரோ மந்திரம் என்பது இங்கு, "ஈசானஸ்ஸர்வ வித்யானும்" என்று ஆரம்பமாகும் ஈசானவேத மந்திரமாகும். இம்மந்திரம் இறைவனுக்குச் சிரசாகவிருப்பதால் சிரோமந்திரம் என்று கூறப்பட்டிருக்கிறது)

धूपदीपौ ददेत्पश्चादन्तर्बाह्यबलिं क्षिपेत् ॥ 529
श्रोत्राभिवन्दनं कृत्वा वर्मणा परिधीन् दहेत् ।

विष्टराणि समादाय कृत्वा ग्रंथिविसर्जनम् ।
दर्भास्तरणमानीय घृते संसेच्य निर्दहेत् ॥ 530

தூபம் தீபம் கொடுத்துப் பிறகு அந்தர்பலி பஹிர்பலி கொடுத்து ச்ரோத்ராபிவந்தனம் செய்து கவச மந்திரம் சொல்லி பரிதிகளை அக்னியிலிட்டுக் கொளுத்தவேண்டும். பிறகு விஷ்ட

ரங்களை எடுத்து முடிச்சை அவிழ்த்து விஸர்ஜனம் செய்துவிட்டு பரிஸ்தரண தர்ப்பத்தை எடுத்து நெய்யில் நனைத்து குண்டாக்னியில் கொளுத்தவேண்டும்.

तद्भस्म संगृहीत्वा तु धारयेत्तु ललाटके ।
सकळीकरणं कृत्वा पश्चाज्जप्त्वा समर्पयेत् ॥ 531

नाडीसन्धानमार्गेण कुण्डाद्देवं समाहरेत् ।
कुम्भे संयोजयेद्विद्वान्धूपदीपादि संयुतम् ॥ 532

अग्निं विसर्जयेत्पश्चादस्त्र कुंभं च वर्धनीम् ।
द्वारपालादि लोकेशान् विसर्जयेत्सकलानपि ॥ 533

கொளுத்தப்பட்ட பரிஸ்தரண தர்ப்பத்தின் பஸ்மாவை எடுத்து தனது நெற்றியில் இட்டுக்கொண்டு ஸகளீகரணம் செய்து பிறகு ஜபம் செய்து சமர்ப்பணம் செய்யவேண்டும். பிறகு நாடீசந்தானம் என்ற முறைப்படி குண்டத்தினின்றும் சுவாமியை ஆகர்ஷணம் செய்து கும்பத்தில் சம்யோஜனம் செய்ய வேண்டும், உடன் தூபதீபம் கொடுத்து அக்னியை விஸர்ஜனம் செய்யவேண்டும். அதன்பிறகு அஸ்திரகும்பத்தையும் வர்த்தனியையும், த்வாரபாலகர்களையும் பின்பு லோகேசர்களையும் விஸர்ஜனம் செய்யவேண்டும். அதன்பிறகு மண்டபத்தில் ஆவாஹிதர்களான எல்லோரையும் விஸர்ஜனம் செய்யவேண்டும்.

सुमुहूर्तमनुप्राप्ते यात्रादानं प्रदापयेत् ।
गोभूतिलहिरण्याज्य वासोधान्यगुळानि च ॥ 534

रौप्यं लवणमित्याहुः दशदानं प्रकीर्तितम् ।
कन्योपनयनदानं च भस्म रुद्राक्षलिङ्गकम् ॥ 535

अन्यानि शास्त्रयुक्तानि क्रमेणैव तु दापयेत् ।

கும்பாபிஷேகத்திற்குரியதான நல்ல முகூர்த்தம் வந்தவுடன் யாத்ராதானம் செய்யவேண்டும். அதன்பிறகு பசு, பூமி, ஹிரண்யம், ஆஜ்யம், வஸ்திரம், தான்யம், வெல்லம், வெள்ளி, உப்பு, என்ற தசதானங்களையும் மற்றும் கன்னிகாதானம், உபனயனார்த்தமான பொருள்தானம், விபூதி, ருத்ராக்ஷம், சிவலிங்கம் முதலிய தானங்களையும் செய்யவேண்டும்.

(தொடரும்)

தருமை ஆதீனம்

ஸ்ரீ வேளூர் தேவஸ்தானம்

இலவச சித்த வைத்தியசாலை

உலகில் தோன்றிய உயிர்கள் அனைத்தும் சுகமாக வாழ வேண்டும் என்பதே அனைவருடைய உள்ளக்கிடக்கை. இதில் அரசியல் கட்சிகளுக்கோ சமுதாய நலத் திட்ட ஸ்தாபனங்களுக்கோ வேறுபாடு கிடையாது. ஆனால் உயிர்கள் அனைத்தும் சுகமாக வாழ முடியாமல் ஒரு தடை இருந்துகொண்டிருக்கிறது. அந்தத் தடை எப்பொழுது உண்டாயிற்று என்று யாராலும் சொல்ல முடியவில்லை. அந்தத் தடைதான் நோய். நோய், உடல் நோய் என்றும் உயிர்நோய் என்றும் இரண்டு வகைப் படும். உயிர்நோய் தவவழியில் சிறந்த சிவஞானிகளால்மட்டுமே நீக்குதற்குரியது. வேறு யாவராலும் நீக்க முடியாது. உடல் நோயையும் முற்றிலும் நீக்குவது எளிதன்று. சிவஞானம் கைவரப்பெற்ற பெரியோர்களின் முறை சித்த வைத்தியம் என்ற பெயரில் தமிழ் நாட்டில் வழங்கிவருகிறது. அம் முறையினால் மேல்நாட்டு மருத்துவக் கலையில் மிக உன்னத தேர்ச்சிபெற்ற மருத்துவர்களாலும் கைவிடப்பட்ட நோய்கள் பலவற்றை குணம் செய்கின்ற சித்த வைத்தியர் பலர் இருக்கின்றனர். அவர்கள் தீராதநோய்களைத் தீர்த்தருளவல்ல ஸ்ரீ வைத்தியநாதபெருமான் திருவருளையே. துணையாகக்கொண்டு பணிபுரிகின்றனர் இவ்வூரிலும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தின் அருள் ஆசியினால் ஒரு சித்த வைத்திய சாலை ஆரம்பிக்கப்பட்டு 1961ம் ஆண்டு முதல் மக்களுக்கு அருள் தொண்டு ஆற்றிவருகிறது. இதுவரையில் லட்சத்துக்கு அதிக மான பேர்கள் மருத்துவம் பெற்று குணமடைந்து இருக்கிறார் கள். அதில் பலர் பிரபல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட வர்கள்.

மருத்துவ சிகிச்சை பெற்றவர்கள் விபரம் :-

பெண்கள் கெர்ப்பக் கோளாறு, மேகரோகம், குன்ம ரோகம், வாதரோகம், சுரம் முதலியவற்றால் பீடிக்கப்பட்டவர் கள் 1260 பேர்.

ஆண்கள் மேகத்தால் ஏற்பட்ட சருமரோகம், பிரமேகம்; கிரந்தி, வெட்டை, வாதரோகம், காசம், பாண்டு, குஷ்டம், வெண்குஷ்டம், செம்மேகம், கருமேகம் முதலிய வியாதியஸ்தர்கள் 940.

குழந்தைகள் :- சுரம், கணை, இசிவு, மாந்தம், அஜீர்ணம், சொரிசிரங்கு முதலியவற்ருல் பீடிக்கப்பட்டவர்கள் 592.

ஆகமொத்தம் 2792.

இரண்டு நோயாளிகள் எழுதும் கருத்துக்கள் கீழே தரப் பட்டுள்ளன.

1—1—65.

I was suffering from Megham very badly. On the advice of my friends I visited this very popular Siddha vaidhyasala for treatment. The doctor K. Rama Krishna Pillai incharge of the hospital kindly and generously examined and treated me and I can assert and say that I can completely be cured of the disease and I can never forget the yeoman service he has been rendering me as well as the public.

It is no wonder the Hospital has earned a good name among the public. His Holiness Maha Sanidhanam deserves all congratulations for running the Siddha vaidyasala and placing it under the able guidance and working of Doctor K. Ramakrishna Pillai.

I am very much thankful and wish the institution and the doctor all success

(Sd.) K. Sankara Variar,
Dy. Register of Coop. Societies,
Tiruvarur.

Vaithiswarankoil,
25—10—64.

Visisted the hospital today. The Doctor incharge Sri Ramakrishnan was kind enough to explain to me the details of the work done. He also showed me records to show that he has cured sevaral disease like 'Cancer' etc. Such dispensarys deserve encouragement. There should be also good publicity, so that people can make use of such good institutions. I wish the institution good success.

I am sure under the present Dr. Ramakrishnan will thrive very well.

(Sd.) A. Gopal Padayachi,
Dy. Collector (Rtd.)

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kampahareswaraswami Devasthanam, Thirubuvanam.

கோயிலுக்குள் நுழையுமுன்பே தருமை ஆதீன ஆட்சிக்குட்பட்ட கோயில் என்பதை மிக எளிதில் புரிந்துகொள்ளும் முறையில் உள்ள கோயில்களில் இதுவும் ஒன்று. சோழ மாமன்னர்கள் என்ன விரும்பினர்களோ அது இன்று எல்லாவகையிலும் கோவில்பூஜை முறையிலும் நிர்வாகத்திலும் நிலவும்படி கயிலைக் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் செய்துவருவது மனதுக்கு மகிழ்ச்சியளிக்கிறது. நிர்வாக ஒழுங்கும் சிப்பந்திகளின் செம்மை நெறியும் பக்திசிரத்தையும் காணும்போது தருமை ஆதீன ஆட்சிக் கோயில்களைப் பார்த்து அரசும் பிற அறநிலையங்களும், கோயில்களை நிர்வகிக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று சொல்லத் தோன்றுகின்றது.

வாழ்க தருமைவேந்தர் நல்லருளாட்சி.

(Sd.) M. SP. சண்முகம்,
Editor-in-charge, Agriculture Information Service, T. C. A. R.
Ministry of Food and Agriculture.

Krishi Bhavan,
New Delhi 1.
25—5—65.

செய்திகள்

தருமையாதீனத்தில்

ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம் விசுவாவசு ஆண்டு சித்திரைமாதம் 30-ஆம் நாள் புதன்கிழமை முதல் வைகாசிமாதம் 8-ஆம் நாள் வெள்ளிக்கிழமை முடிய (12—5—65 - 21—5—65) உள்ள நாட்களில் சிறந்த முறையில் நடைபெற்றது.

12—5—65 புதன்கிழமை காலை சுமார் 8-30 மணியளவில் துவஜாரோகணம் நிகழ்ந்தது. அன்றுமுதல் காலை மாலை இரு வேளைகளிலும் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா நடைபெற்றது. 18—5—65 செவ்வாய்க்கிழமையன்று இரவு 8-15 மணிக்குமேல் திருக்கல்யாணம் சிறப்பாக நிகழ்ந்தபின்னர் புஷ்ப விமானம் மின்விளக்குகளால் ஒப்பனை செய்யப்பெற்ற வெள்ளிரதம் ஆகியவற்றில் பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா நடந்தது. 20—5—65 வியாழக்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 21—5—65 வெள்ளிக்கிழமை ரிஷபாருடராய் பஞ்சமூர்த்திகள் காவிரியில் தீர்த்தங் கொடுத்தருளலும் இரவு துவஜாவரோகணமும் நடைபெற்றன.

விழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். திருக்கல்யாணத்தன்று ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி திருக்கல்யாணத் தரிசனம் செய்து, திருக்கல்யாணப் பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப் பைகளை அன்பர்களுக்கு வழங்கியருளினார்கள். சிறந்த நாதஸ்வர இன்னிசை நாள்தோறும் நடைபெற்றது. சிறப்பாக, திருமுறை இன்னிசைவாணர்கள் தக்க பக்க வாத்தியங்களுடன் திருவீதியுலாவின் போது திருமுறைப் பாராயணம் நிகழ்த்தினர். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு உய்ந்தனர்.

தருமையாதீனஸ்தாபகர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள் குருபூஜை விழா

21—5—65 வெள்ளிக்கிழமை தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் சிவசமாதி கூடிய திருநாள். அன்று காலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகா சந்நிதானம் அவர்கள் மேலக்குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளி, இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் குருமூர்த்தம் முதலியவற்றில் வழிபா டாற்றியருளினார்கள். பின்னர் ஆன்மார்த்தமூர்த்தியாகிய ஆல வாய்ச்சொக்கலிங்கப் பெருமான் வழிபாட்டிற்கு எழுந்தருளினார் கள். அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன.

வழிபாட்டிற்கு, திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம், காசிவாசி இளவரசு வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளி தரிசனம் செய்தார்கள். வழிபாட்டிற்குப் பின்னர், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் தஞ்சை இந்து சமய அறநிலையத்துறைத் துணை ஆணையர், திரு. ஏ. மார்க்கண்டவேல்ராஜ் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி சிறப்பித்து, திரு. முருக கிருபானந்தவாரியார் அவர்களுக்கு 'அமுதமொழிக் கொண்டல்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். பின்னர் வழிபாட் டிற்கு வந்திருந்த எல்லா அன்பர்களுக்கும் விபூதி பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் சிவசமாதி கூடிய நாளாதலின் ஸ்ரீஞானபுரீசருக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப் பட்டன. ஸ்ரீலஸ்ரீகயிலைக்குருமகாசந்நிதானம் அவர்களும் ஸ்ரீ காசி மடம் இளவரசு சுவாமிகள் அவர்களும் எழுந்தருளி வழிபட்டார் கள். பெருமக்கள் பலரும்வந்து தரிசித்து மகிழ்ந்தனர். வழிபாட் டிற்கு வந்திருந்தவர்கள் எல்லோருக்கும் விபூதி பிரசாதங்கள் வைக்கப்பெற்ற துணிப்பைகள் வழங்கப்பட்டன.

மாலை 6 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளினார்கள். காவிரிக் கரையில் முதலில் திருமுறைப் பாராயணம் நிகழ்ந்தது. அடுத்து திருச்சி, திருக்குறள்வேள் திரு. ஜி. வரதராஜப் பிள்ளை

அவர்கள் "பத்தாம் திருமுறை" என்பது பற்றிச் சொற்பொழி வாற்றினர்கள். பின்னர் திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் குழுவினரால் 'திருநாவுக்கரசர் வரலாறு' இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பட்டது. அன்பர்கள் பலர் குழுமியிருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

பின்னர் அங்குக் குழுமியிருந்தோரனைவருக்கும் சிற்றுண்டி யளிக்கப்பட்டது. இரவு சுமார் 9 மணிக்கு மேல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருமஞ்சன வீதியில் உள்ள குருமூர்த்தங்களை வழிபட்டு திருமடத்திற்கு எழுந்தருளி ஸ்ரீசொக்கநாதப்பெருமானுக்குச் சிறப்புவழிபாடு நிகழ்த்தி கொலு வீற்றிருந்து அருள்ஆசி வழங்கினர்கள். அன்பர்கள் கொலுக் காட்சியைத் தரிசித்து உய்ந்தனர். பின்னர் ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் அருட்பிரசாதமாகிய திருமெய்ஞ்ஞானம் அன்பர் களுக்கு வழங்கப்பட்டது.

பட்டணப்பிரவேசத் திருநாள்

22—5—65 சனிக்கிழமை ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. பின்னர் மாகேஸ்வர பூஜையும் சிறப்புற நிகழ்ந்தது. மாலை 6 மணியிலிருந்தே பட்டணப்பிரவேசக் காட்சியைக் காண மக்கள் திரள்திரளாக வந்து கூடியவண்ணமிருந்தனர். இரவு பத்துமணிக்கெல்லாம் எடுபிடிகள் யானைகள் முதலியவற்றின் வரிசைகள் புறப்பட்டன.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் ஸ்ரீ சொக்க நாதப் பெருமானை வழிபட்டு பட்டணப்பிரவேசத்திற்கு எழுந் தருளி சிவிகையில் ஆரோகணித்தார்கள். மாயூரம் முதலிய பல இடங்களிலிருந்து வந்த சைவப் பெருமக்கள் பலர் சிவிகையைச் சூழ்ந்துவர சிவிகை புறப்பாடாயிற்று. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மெய்யன்பர்களுக்கு மரியாதைகள் செய்வித்து ஆசி வழங்கினர்கள். இத் திருநாளுக்காகப் போடப்பட்ட பந்தல் முகப்பு மிக அழகிய முறையில் பலரும் கண்டு வியக்கும் வண்ணம் அமைந்து விளங்கியது. முகப்பில் பல வண்ணங்களாலாகிய மின்விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தன. அது காண்போர் கண்களைக் கவரும் வண்ணம் அமைந்து விளங்கியது. பட்டணப் பிரவேசத் திருநாளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள். கொலுவிற்றிருந்து அருளாசி வழங்கியருளினர்கள்.

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகோற்சவத்தில்
திருமுறைவிழா.

பண்ணிசைப்பாராயணத்துடன் எட்டுயானைகள்மீது
திருமுறைகள் திருவீதியுலா

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனத்திற்குச்
சொந்தமான
கருங்குயில்நாதன் பேட்டை ஸ்ரீ சக்திபுரீஸ்வரசுவாமி
தேவஸ்தானத்தில் மகா கும்பாபிஷேகம்

யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளல்.

கும்பாபிஷேகத்தைத் தரிசனம் செய்யும் அன்பர்கள்.

அன்னம்பாலிப்பு

ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் 21—5—65 வெள்ளிக்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை முன்னிட்டு திருவாரூர், காசி, திருநெல்வேலி, கேதாரம், சிதம்பரம், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவசைலம், இராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி ஆகிய இடங்களில் அடியவர்கட்கும், ஏழைகட்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளால் அன்னம்பாலிப்பும் சமய விரிவுரைகளும் நிகழ்த்தப்பெற்றன.

தருமையாதீனத்தில் 21—5—65 வெள்ளிக்கிழமை குருபூஜை விழாவன்று திரள் திரளாக மக்கள் வந்து அன்னம்பாலிப்பில் கலந்துகொண்டு அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்தனர்.

சிவஞானசித்தியார் பாட வகுப்பு

தருமையாதீன முதற் குரவர் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவையொட்டி 12—5—65 புதன்கிழமை முதல் சிவஞான சித்தியார் பாட வகுப்பு ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் பூஜை மடத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் நடைபெற்றது. வகுப்பில் ஆதீனத் திருக்கூட்டத்து அடியவர்களும், கல்லூரி ஆசிரியர்களும், வேறு சிலரும் கலந்து கொண்டு பயன் பெற்றனர். தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், சித்தாந்தக் கலைமணி, வித்துவான், திருவாளர். சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் சித்தாந்தச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள். 22—5—65 சனிக்கிழமை மாலை திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் வகுப்பு நிறைவுபெற்றது.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு.

ஸ்ரீ ஞானபுரீசுவரர் மகோற்சவத்தை முன்னிட்டு 12—5—65 புதன்கிழமை முதல் 22—5—65 சனிக்கிழமை வரை உள்ள நாட்களில் ஆதீன மடாலய முகப்பில் உள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றது. மாநாட்டுத் தொடக்கத்தின்போது பண்ணிசை வாணர்களின்

திருமுறைப்பாராயணம் நடைபெற்றது. பின்னர் சென்னை பிரசார நிலையம் வித்துவான். ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மாநாட்டுச் சொற்பொழிவாளர் முதலியவர்களை வரவேற்று வரவேற்புரையும் மாநாட்டின் முடிவில் நன்றியுரையும் கூறி உடனிருந்து நடத்தி வைத்தார்கள். மாநாட்டுத் தொடக்க வுரையாற்ற வந்த பெருமக்களுக்கு ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகை திருக்கோயில் திருமுன்னர் வரவேற்பளித்து ஸ்ரீ துர்க்காம்பிகை திருக்கோயில் வழிபாடு செய்து வைக்கப்பட்டது. பின்னர் ஆதீன மடாலய முகப்பில் மாலையணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது. அடுத்து ஸ்ரீ சொக்கநாதப்பெருமானை வழிபட்டு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைத் தரிசனம் செய்தனர். நாள்தோறும் தொடக்கவுரை, சொற்பொழிவுகள் இன்னிசை முதலிய நிகழ்ச்சிகள் முறையாக நடைபெற்றன. 21, 22—5—65 ஆகிய இரண்டு நாட்களும் குருபூஜை பட்டணப்பிரவேசத் திருநாள் ஆதலின் காலை, மாலை இரு வேளைகளிலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு 12—5—65 புதன்கிழமை முதல் ஒவ்வொருநாளும் ஒவ்வொரு திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. அம்முறையில் முதல் திருநாள்முதல் பத்துத் திருநாட்களும் திருஞானசம்பந்தர் திருநாள், திருநாவுக்கரசர் திருநாள், சுந்தரர் திருநாள், மாணிக்கவாசகர் திருநாள், மெய்கண்டார் திருநாள், அருணந்தி சிவாசாரியர் திருநாள், மறைஞானசம்பந்தர் திருநாள், உமாபதி சிவாசாரியர் திருநாள், கமலை ஞானப்பிரகாசர் திருநாள், குருஞானசம்பந்தர் திருநாள் என்று அமைக்கப்பெற்றிருந்தன. 22—5—65 பட்டணப்பிரவேசத் திருநாள் ஆனந்தபரவசர் திருநாளாக அமைந்திருந்தது. இத்திருநாட்களில் முறையே புதுவை மாநில அமைச்சர், கனம் திரு. A. S. காங்கேயம் பிள்ளை, பொள்ளாச்சி திரு N. மகாலிங்கம் பி. எஸ். ஸீ., எம். ஐ. இ. எம். எல். ஏ., சென்னை இந்து அறநிலையத்துறை ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார் பி. ஏ. பி. எல். சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி திரு. ஆர். சதாசிவம் பி. ஏ. எம். எல். சிதம்பரம் டாக்டர் திரு. கே. அரங்கசாமி பிள்ளை எம். பி. பி. எஸ். புதுவை மாநிலமுதலமைச்சர் கனம் திரு. வி வேங்கடசுப்பா ரெட்டியார், புதுவை மாநில அமைச்சர் கனம். திரு. ப. சண்முகம், பாண்டிச்சேரி, திரு. எஸ், சென்னியப்ப முதலியார், மதுரை தினமணி பொறுப்பாசிரியர், திரு. V. சந்தானம். தஞ்சாவூர், இந்து சமய அறநிலையத்துறைத் துணை

ஆணையர். திரு. A. மார்க்கண்டவேல்ராஜ் ஆகியோர் தொடக்கவுரையாற்றினர்.

இந்த நாட்களில் சிறந்த அறிஞர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். சொற்பொழிவின் தலைப்புக்களாக பன்னிரண்டு திருமுறைகளும், பதினான்கு சாத்திரங்களும் அமைந்திருந்தன. சொற்பொழிவுகளுக்குப் பின்னர் இன்னிசைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

12—5—65 அன்று தஞ்சாவூர் இசைவாணி, திருமதி T. S. விமலகுமாரி குழுவினரால் வள்ளித்திருமணம் கதாகாலக்ஷேபமாகச் செய்யப்பெற்றது. 13—5—65 சென்னை, வில்லிசை அரசு, திரு. கே. சி. சுவாமிநாதன் குழுவினர் வில்லுப்பாட்டு நிகழ்ந்தது. திருஞானசம்பந்தர் வரலாறு வில்லுப்பாட்டின் பொருளாக அமைந்திருந்தது. 14—5—65 அன்று சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன், திரு. சிவப்பிரகாசம் குழுவினரின் திருமுறை இன்னிசை அரங்கு நிகழ்ந்தது.

15—5—65 அன்று அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைக் கல்லூரி முதல்வர், தருமையாதீன இசைப் புலவர், இசையரசு, திரு. M. M. தண்டபாணி தேசிகர் குழுவினரின் இன்னிசையும், 16—5—65 அன்று. திருமதி. சேலம் ஜெயலெட்சுமி குழுவினரின் இன்னிசையும், நடைபெற்றன. 17—5—65 அன்று தருமையாதீன வித்துவான், கீர்த்தன குலசேகர, சங்கீத சாகித்ய வல்லப கதாரசாஸ்வாதக, எம்பார், ஸ்ரீமத் விஜயராகவாச்சாரியார் குழுவினரால் "சுந்தரர்" வரலாறு பற்றிய கதாகாலக்ஷேபமும். 18—5—65 அன்று சென்னை, குமாரி கௌரி குழுவினரால் "குருஞானசம்பந்தர்" வரலாறு பற்றிய கதாகாலக்ஷேபமும் நிகழ்த்தப்பெற்றன. 19—5—65 அன்று தஞ்சாவூர் திரு. N. வசந்தா குழுவினரின் இன்னிசையரங்கு நிகழ்ந்தது

21—5—65 குருபூஜைத் திருநாள். அன்று காவிரிக்கரையில் கொத்தமங்கலம் சுப்பு குழுவினரால் "திருநாவுக்கரசர்" வரலாறு இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பெற்றது. 22-5-65 பட்டணப் பிரவேசத் திருநாள். அன்று ஏழிசை வல்லபி. திருமதி கே. பி. சுந்தராம்பாள் குழுவினரின் இன்னிசையரங்கு நடைபெற்றது. நாள்தோறும் அன்பர்கள் பலர் குழுமியிருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

திருமுறை விழா

19—5—65 புதன்கிழமை ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் திருமுறை விழா நடைபெற்றது. ஆதீனத்தின் வெளியீட்டு வரிசையில் இன்றுவரை வெளியிடப்பட்டுள்ள ஏழு திருமுறைகளை ஏழு யானைகள்மீதும், பன்னிரண்டு திருமுறைகளையும் சேர்த்து ஒரு யானை மீதும் வைத்து ஒப்பனைகள் செய்து எட்டு யானைகள்மீது திருமுறைத் திருவீதியுலா நிகழ்த்தப்பட்டது, திருவீதியுலாவின்போது சிறந்த பண்ணிசை வாணர்கள் பலர் திருமுறைகளைப் பண்ணிசையுடன் பாடினர்.

மேலும், திருவீதியுலாவின்போது பல அறிஞர்களின் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. பாண்டிச்சேரி திரு. எஸ். சென்னியப்ப முதலியார் தொடக்கவுரையாற்றினர்கள். திருவாசகமணி' திரு. K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L., தருமையாதீனம் புலவர், பாலகவி, வயிநாகரம், திரு. வே. இராமநாதன் செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர், வித்துவான், திரு. அ. நடேச முதலியார் ஆதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர்கள் முதலிய பலர் சொற்பொழிவாற்றினர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபட்டு, சொற்பொழிவாளர்கள், பண்ணிசைவாணர்கள் முதலியவர்களுக்குப் பால் முதலியன வழங்கி அருளினர்கள். அறிஞர்கள் பலர் குழுமியிருந்து கேட்டு மகிழ்ந்தனர்.

24 ஆவது குருமகாசந்நிதானத்தின் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 24 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் 20 ஆவது ஆண்டுக் குருபூஜை விழா விசுவாவசுஸு வைகாசிமீ 25௨ (7—6—65) திங்கட்கிழமை நடைபெற்றது. காலை - மாலை குருமூர்த்திகளின் ஆலயத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் திருமுறைப் பாராயணமும் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. அன்பர்கள் வந்து தரிசித்தும் கேட்டும் குருவருள்பெற்று உய்ந்தனர்,

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதங்கள் முதலியனவும். பக்ஷணங்கள் வைக்கப்பெற்ற பைகளும் வழங்கியருளினார்கள். காலைமாலை இருவேளைகளிலும் சித்ரான்னங்கள் வழங்கப்பட்டன, மாலை வழிபாட்டிற்கு நிவேதனப்பொருள்களாகிய தேங்காய் பழம் முதலியன 24 தட்டுக்களில் வைத்து நாதஸ்வர இன்னிசையுடன் வலமாக எடுத்து வரப்பெற்றன.

குருமூர்த்த ஆலயத்தில் சங்கத்தமிழ்ச் சொற்பொழிவுகள் காலை 10 மணி முதல் நடைபெற்றன. வித்துவான். ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "திருமுருகாற்றுப்படை" என்ற தலைப்பிலும், வித்துவான். ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "பொருநராற்றுப்படை" என்ற தலைப்பிலும், வித்துவான், ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "பெரும்பாணாற்றுப்படை" என்ற தலைப்பிலும், வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "சிறுபாணாற்றுப்படை". என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் "முல்லைப்பாட்டு - மதுரைக்காஞ்சி" என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் "நெடுநல்வாடை - குறிஞ்சிப்பாட்டு" என்ற தலைப்பிலும், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் "பட்டினப்பாலை" என்ற தலைப்பிலும், சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர். இரவு, சென்னை. சிவசுப்பிரமணியம் அவர்களின் இன்னிசை சிறப்பாக நடைபெற்றது.

சீகாழியில் ஸ்ரீ சட்டைநாதர் வழிபாடு.

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீசட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில் ஸ்ரீ சட்டைநாதசுவாமிக்குப் பத்தாவது ஆண்டு சிறப்பு வழிபாடு விசுவாவசு ஆண்டு வைகாசித்திங்கள் 22ஆம் நாள் (4—6—65) வெள்ளிக்கிழமை யன்று நடைபெற்றது. அன்று காலை ஸ்ரீ முத்துசட்டைநாத சுவாமியை யதாஸ்தானத்திலிருந்து வலம்புரி மண்டபத்திற்கு எழுந்தருளச்செய்து அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன, இரவு புறப்பாடாகிப் பின் யதாஸ்தானத்திற்கு எழுந்தருளச் செய்யப்பெற்ற பின்னர் ஸ்ரீ சட்டைநாதசுவாமிக்கு புழுகாப்பு தரிசனம் நிகழ்ந்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினர்கள்,

ஸ்ரீ சட்டைநாதசுவாமி பிரசாதம் வைக்கப்பெற்ற பைகள் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.

அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகம் மொழியாராய்ச்சித் துறை. செஞ்சொற்கொண்டல் வித்துவான் திரு. சொ. சிங்கார வேலன் எம். ஏ. அவர்கள் 'ஆபதுத்தாரணர் மாலை' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள். அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

வேளூரில்

மண்டலாபிஷேகக் கார்த்திகை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் மண்டலாபிஷேக கிருத்திகை விழா 19—5—65 ஞாயிற்றுக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடந்தது. வழக்கம்போல் ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள். பல ஊர்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் மக்கள் திரளாக வந்து சித்தாமிர்தத்தீர்த்தத்தில் நீராடி வழிபட்டு ஸ்ரீ செல்வமுத்துக்குமாரரின் அபிஷேக அருள் பிரசாதமாகிய சந்தனக்குழம்பு பெற்று மகிழ்ந்தனர். அன்று இரவு பஞ்சமூர்த்திகள் திருவீதியுலா நிகழ்ந்தது. ஸ்ரீ வைத்தியநாதப்பெருமான், ஸ்ரீ தையல்நாயகி, ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி ஆகிய மூர்த்திகள் புஷ்பப்பல்லக்குகளில் எழுந்தருளச் செய்யப்பெற்றனர். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றினார்கள்.

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தின்

வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகை உபய விழா

நமது நிலைய அன்பர்கள், கிருத்திகைப் பிரசாதம் பெறும் உறுப்பினர்கள் சார்பில் உபயமாக வைத்தீஸ்வரன்கோயிலில் சித்திரை மாதக்கிருத்திகை விழா 2—5—65 ஞாயிறு காலை வெகு சிறப்பாக நடைபெற்றது. டி அபிஷேக அர்ச்சனைப் பிரசாதங்

கள் 3—5—65 மாலை 7-மணிக்குச் சென்னை சமயப்பிரசார நிலையத்தில் வழக்கறிஞர் திரு. T. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ்ப் பாராயணம் நிகழ்த்தி அன்பர்கட்கும், உறுப்பினர்கட்கும் வழங்கப்பெற்றன. தருமபுரம் திரு. பி. சுவாமிநாதன் பிரார்த்தனை நிகழ்த்தினர்.

ஷை கிருத்திகை விழாவை ஒட்டி நிலைய வழிபாட்டுக் குழுவினர் பேருந்தூர்தி மூலம் புறப்பட்டு 1-5-65 பகல் 12 மணிக்குக் கங்கைகொண்ட சோழபுரத்திலும், மாலை 7-மணிக்குக் கோவிந்த புத்தூரிலும் (விசயமங்கை) வழிபாடும் சமயப் பிரசாரமும் நிகழ்த்தினர். கங்கைகொண்ட சோழபுரத்தில் அறங்காவலர், திரு. கலியபெருமாள் அவர்களும், நிர்வாக அதிகாரி திரு. சிதம்பரம் அவர்களும் குழுவினரை வரவேற்று உடனிருந்து வழிபாட்டை நன்கு நடத்தி கொடுத்தனர். திருப்பனந்தாள், திரு. T. M. சடையப் பிள்ளை அவர்கள் குழுவினரை வரவேற்று மாகேஸ்வர பூசை செய்து வைத்து உபசரித்தார்கள்.

கோவிந்தபுத்தூரில் அறங்காவலரும், நிர்வாக அதிகாரியும் குழுவினரை வரவேற்று வழிபாடும் பிரசாரமும் சிறப்புற நடத்தி வைத்தும் சிற்றுண்டி அளித்தும் உபசரித்தனர். பிறகு குழுவினர் 2—5—65 காலை வேளூரிலும், மாலையில் திருவாமூர் அப்பர் சுவாமிகள் ஆலயத்திலும் வழிபாடு நிகழ்த்திச் சென்னை சேர்ந்தனர்.

திருவாமூரில் சதய விழா

அப்பர் சுவாமிகள் (திருநாவுக்கரசர்) அவதாரத்தலமாகிய திருவாமூர் திருநாவுக்கரசு நாயனர் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அப்பர் சுவாமிக்கும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ பசுபதீஸ்வர சுவாமிக்கும் வைகாசி மாதம் சதய நக்ஷத்திரத்தன்று 24—5—65 திங்கட்கிழமை தருமபுர ஆதீன உபயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனை நடைபெற்றது. அன்று மாலை அப்பர் சுவாமிக்குச் சோடசோபசார தீபாராதனை நிகழ்த்தப் பெற்றது. ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர், திரு. அ. நடேச முதலியார் அவர்களும், விருத்தாசலம்

நாட்டாண்மைக்கழக பெண்கள் உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் வித்துவான், திரு. ஞானப்பிரகாசம் பிள்ளை அவர்களும், அப்பர் தேவாரம் பற்றியும், அப்பர் வரலாற்றுக் குறிப்புப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினர். அப்பர் கோயில் திருமுறை வகுப்பு ஆசிரியர் திரு. என். சங்கரநாராயண ஓதுவாரும், மாணவ மாணவியரும் தேவாரம் ஓதி சிறப்பித்தனர். அப்பர் கோயில் ஸ்நபன பூசைக்காகச் சென்னை திரு. கே. வி நாகலிங்க முதலியார் முந்நூறு ரூபாய் பெறுமானம் உள்ள வெள்ளிக் குடம் ஒன்று மேற்படி ஆலயத்திற்குப்பிரார்த்தனைக் காணிக்கையாக அளித்தார்கள். உள்ளூர், வெளியூர் மக்கள் ஏராளமாக வந்து வழிபட்டும், சொற்பொழிவு கேட்டும் பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

உ

சிவமயம்

வைத்தீஸ்வரன்கோயில்

ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி

கிருத்திகா நக்ஷத்திர அபிஷேகம்

ஆனி	12உ	26- 6-65	சனிக்கிழமை
ஆடி	8உ	23- 7-65	வெள்ளிக்கிழமை
ஆவணி	4உ	20- 8-65	வெள்ளிக்கிழமை
,,	31உ	16- 9-65	வியாழக்கிழமை
புரட்டாசி	27உ	13-10-65	புதன்கிழமை
ஐப்பசி	25உ	10-11-65	புதன்கிழமை
கார்த்திகை	22உ	7-12-65	செவ்வாய்க்கிழமை
மார்கழி	19உ	3- 1-66	திங்கட்கிழமை
தை	18உ	31- 1-66	திங்கட்கிழமை
மாசி	16உ	27- 2-66	ஞாயிற்றுக்கிழமை
பங்குனி	13உ	26- 3-66	சனிக்கிழமை

எதிர்காலம் - திரு. கே. முத்துஜோதிடர்

(விசுவாவசு௵ ஆனிமீ 1௨ முதல் 31௨ முடிய)

(15—6—65 முதல் 15—7—65 முடிய)

1. மேஷம். அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத் தரும். விவாகாதி சுபங்களாலும் தூர யாத்திரைகளாலும் பணச் செலவு அதிகமாகும். பந்துமித்திராதிகளுடைய சேர்க்கையும் குறையும். மனம் சதா சஞ்சலம் அடையும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

2. ரிஷபம். கார்த்திகை ¾ - ரோஹிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் ஒரு பங்கு நன்மையையும் மூன்று பங்கு அசௌகரியமான பலன்களையும் காட்டும். வியாதியாலும் கடன் தொல்லையாலும் சிரமம் ஏற்படும் குடும்பம் சரிவர நடைபெறாது. கிரயவிக்ரயங்கள் நஷ்டத்துக்கு ஏற்படும். சனி செவ்வாய் சுபமாகும்.

3. மிதுனம் மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். சதா அலைச்சலை உண்டுபண்ணும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். தெய்வபக்தி அதிகமாகும். வரவு செலவுகள் சமனாகும். புதன் வியாழன் சுபமாகும்.

4. கடகம் புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். விவாகாதி சுப காரியங்கள் நடைபெறும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். உலகப் பிரசித்தி ஏற்படச்செய்யும். சகல காரியங்களும் வெற்றியடையும். சனி செவ்வாய் சுபமாகும்.

5. சிம்மம். மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் மேற்படி மாதம் 15 ஆம் தேதி முடிய பூர்ண சுபத்தைத்தரும். இராஜாங்க மூலமாயும், நண்பர்கள் மூலமாயும் எல்லாக் காரியங்களும் வெற்றியுடையும். 15 ஆம் தேதிக்குமேல் மாதம் முடிய அதிக செலவினங்களும், சேர்க்கைக் குறைவும், காரியங்களில் அச்ரத்தையும் காட்டும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

6. கன்னி. உத்திரம் $\frac{3}{4}$ - ஹஸ்தம் - சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் என்றும் கண்டிராத, எவராலும் சாதிக்கமுடியாத காரியங்களைச் சாதிக்கச்செய்யும். உலகெங்கும் கீர்த்தி ஏற்படும். தெய்வபலம் முன்னின்று பிரகாசிக்கும. ஆரோக்கியம் உண்டுபண்ணும். தனதான்யஸமிருத்தி ஏற்படும். நஷ்டமான பொருள்கள் தானுக வந்துசேரும். வியாழன் வெள்ளி சுபமாகும்.

7. துலாம். சித்திரை $\frac{1}{2}$, - சுவாதி - விசாகம் $\frac{3}{4}$.

துலாராசி 9 பாதங்களும் இருள் சூழ்ந்த உலகத்தினின்றும் விடுபட்டு சுக சௌக்கியத்தை அடையச் செய்யும். தெய்வபலம் பிரகாசிக்கும். பூர்வபுண்ணிய விசேஷத்தால் எல்லாம் வெற்றிகரமாகவே நடக்கச்செய்யும். சத்துருக்கள் அபஜயம் அடைந்து ஓடிவிடுவார்கள். உலகப் பிரசித்தி ஏற்பட்டு கீர்த்திப்பத்திரம் கிடைக்கச்செய்யும். ஆரோக்கியமும் சுகமும் உண்டாகும். வெள்ளி சனி சுபமாகும்.

8. விருச்சிகம். விசாகம் $\frac{1}{4}$ - அனுஷம் - கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபத்தையேதரும். அடிக்கடி சஞ்சார பலனையும் உண்டுபண்ணும். சரீரத்தில் உஷ்ணநோய் தாக்கும். சகல காரியங்களும் தவக்கத்தோடு நடக்கச்செய்யும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். திங்கள் செவ்வாய் சுபமாகும்.

9. தனுசு. மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் புத்திராதிகளால் ஓங்கச் செய்யும். இல்லற சுகம் உண்டாகும். கட்டடவேலைகளாலும், சுபகாரியங்களாலும் விரயம் உண்டுபண்ணும். புதன் வியாழன் சுபமாகும்.

10. மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் உத்தியோகத்தில் மேல் பதவியைத் தரும். குடும்பம் ஓங்கும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் எதிர் பாராமல் தாஞக வந்துசேரும். ஆரோக்கியம் உண்டாகும். ஸ்திரமான சுகஜீவனத்தைத்தரும். நூதன வஸ்திராபரணச் சேர்க்கையும், கிரக சுகமும் நீடிக்கும். சனி ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம் - அவிட்டம் $\frac{1}{2}$. சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் விசேஷ நன்மைகளை உண்டு பண்ணும். வம்சம் ஓங்கும். புத்திராதிகளால் சுகம் உண்டாகும். அடிக்கடி சுப காரியங்களும், சஞ்சாரமும் ஏற்படும். கிரக சுகம் ஓங்கும். ஞாயிறு திங்கள் சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் தொழில் மூலமாய் விசேஷ லாபத்தை உண்டுபண்ணும். வெகுகாலமாய் எதிர்பார்த்து நடவாத காரியங்கள் சுலபமாய் நடைபெறும். தெய்வீகத்தன்மை பிரகாசித்துக் கொண்டே இருக்கும். லக்ஷ்மீகடாக்ஷத்தால் குடும்பம் ஓங்கும். புதன் வெள்ளி சுபமாகும்.

குறிப்பு :- உலகில் மக்களின் பூர்வ புண்ணியபாப விசேஷத்தால் ஜெனனகால கிரக நிலைகளைக்கொண்டு பலவிதமான சுக துக்கங்களை அனுபவித்துக்கொண்டு வந்தாலும், தற்காலம் உலகத்துக்கு ஏற்பட்ட ஜாதக கிரக நிலைப்படி ரொம்ப மாறுதல்களைக் கொடுக்கக்கூடியதாக இருப்பதால், மகாஜனங்கள் காம குரோத மதமாத்ஸர்யங்கள் இல்லாமல் ரொம்பவும் அடக்கமாயும், சாத்வீகத்தன்மையோடும், சதா தெய்வ சிந்தனையோடும் இருந்து கொண்டுவர, அந்தந்தப் பிரதேசங்கள் துக்கம் இல்லாமல் சுபிக்ஷகரமாய் இருக்கும். தெய்வபலம் எங்கும் ஓங்கும். இவ்வருஷம் அதிவிருஷ்டி பிரசண்டவாதம் முதலியவைகளாலும், பஞ்சபூதங்களின் சேஷ்டைகளாலும் அனேக தேசங்களுக்கு பயத்தைக் காட்டும். தர்மபூமிகளான பிரதேசங்களில் ஒருவிதமான சிரமும் இருக்காது. சர்வேஸ்வரன் இரக்ஷிப்பாராக. சுபமுண்டாகும்.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Visited the temple and worshipped Swami and Ambal and Muthukumaraswamy. Found the sanctum sanctorium quite pure, inspiring and excedingly serene. My and my family's grateful regards for the Mutt and Devasthanam.

My respectful regards and namaskaram.

(Sd.) K. Annamalai

27—4—65. Deputy Registrar of Co-op-Societies and Principal Vellore co-operative Training Institute, Vellore, N. A. Dist.

Yesterday night and this morning I had the good the good fortune to worship in the calm and clean atmosphere of this temple which is maintained in a very good condition. The Thevaram sung by the Othuvar in a beautiful voice is soul inspiring. The courtesy shown is excellent. My respectful regards to the Adheenam which seed to this excellent administration.

(Sd.) M. S. Ramaswami,

12—5—65. Dt Munsif, Thiruvaiyaru.

இன்று ஸ்ரீ வைத்தீஸ்வரன்கோயில் தரிசனம் கிட்டியது. கோயில், திருவிழாக் காலத்திலும் சுத்தமாக வைக்கப்பட்டுள்ளது மற்ற எல்லாக் கோயில்களும் பின்பற்றத்தகுந்த முறையாகும். அழகான சித்திரங்கள் கோயில் பிராகாரங்களில் அமைக்கப்பட் டுள்ளது மக்கள் அறிவு அபிவிருத்திக்கு நல்லமுறையாகும்.

(ஓ-ம்.) நா. மகாலிங்கம், M. L. A.

14—5—65. பொள்ளாச்சி.

Visited the temple. We had a delightful darsan-an experience of a lifetime.

(Sd.) Srinivasagopalan,
14-5-65. Sub Divisional Magistrate, Mannargudi.

Visited the temple on 17—5—65. It was a wonderful experience for me and the authorities of the temple deserve all praise for the cleanliness and the maintenance of the temple which contribute much to the spiritual atmosphere when man get peace in communication with the Lord.

(Sd.) V. R. Krishnaswamy
17—5—65, Dy. Collector, Central Exise.

Visited the temple on 18th May with my family-struck with utmost cleanliness - well maintained in all respects. The staff extremely courteous, helpful and very friendly. I pray to the presiding Lord for the welfare of all in the country.

(Sd.) A. Sabanathan,
18—5—65. Dy. Central Intelligence Officer
Tiruchirapalli.

Visited the temple with my family. I have great pleasure in recording my feelings and satisfaction at the clean and serene way the temple is maintained and the excellent facilities offorded for worship by the devotees.

(Sd.) S. Panchanatham,
29—5—65. Superintending Engineer P. W. D.
Madras.

தருமையாதினம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் மஹோற்சவத்தில்
12—5—65 அன்று



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை
புதுவை மாநில அமைச்சர் கனம். திரு. A. S. காங்கேயன்
அவர்கள் தரிசித்தல்.

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீஸ்வரர் மகோற்சவத்தில் 13—5—65 அன்று

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களை, பொள்ளாச்சி
திரு. N. மகாலிங்கம் Bsc. M. I. E. M. L A. அவர்கள் தரிசித்தல்.

உ

குருபாதம்

தருமையாதீனம் திருஞானசம்பந்தர் ஆலயம்

திருநெல்வேலி சந்திப்பு.

ஞாயிறுதோறும் மாலே 6-30 மணி முதல் சொற்பொழிவு

13—6—65 முருக நாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளே

,, சிதம்பரச் செய்யுட் கோவை
— திரு. ம. சிவசம்பு

20—6—65 கலிக்காம நாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளே

,, கயிலேக் கலம்பகம்
— திரு. ம. சிவசம்பு

27—6—65 மாணிக்கவாசகர்
— திரு. வ. ச. நடராசபிள்ளே

,, காசிக் கலம்பகம்
— திரு. ம. சிவசம்பு

4—7—65 அமர்நீதி நாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளே

,, மதுரைக் கலம்பகம்
— திரு. ம. சிவசம்பு

11—7—65 மூர்த்தி நாயனர்
— திரு. வ. ச. நடராசபிள்ளே

,, மீனுட்சியம்மை குறம்
— திரு. ம. சிவசம்பு

வந்து கேட்டு இன்புறுக !

நெல்லே அருணகிரி இசைக் கழகம், } இராம. கனகசபாபதி, அமைச்சர்.

விசுவாவசு - ஆனிமீ விசேஷ நாட்கள்

23—6—65 ஏயர்கோன் கலிக்காம நாயனர் திருநக்ஷத்திரம்
26—6—65 வேளூர் கிருத்திகை
3—7—65 மாணிக்கவாசக சுவாமிகள் திருநக்ஷத்திரம்
4—7—65 அமர்நீதி நாயனர் திருநக்ஷத்திரம்
,, ஆனித் திருமஞ்சனம்
5—7—65 தரிசனம்